விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 06 வெள்ளிக்கிழமை (23.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 278

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## நிபுணர் குழுவின் அறிக்கையை ஏற்க இந்தியா மறுப்பு!

(கொழும்பு) நிபுணர்கள் குழுவின் அறிக்கையை ஏற்கக் கூடாது எனக் கோரும் கடிதத்தில் கையொப்பமிட இந்தியா மறுப்புத் தெரிவித்துள்ளது. அது தொடர்பாக விவாதத்தில் பார்த்துக் கொள்ளலாம் என இந்தியா கூறிவிட்டது. (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையை நீக்கும் யோசனை தோற்கடிப்பு

(சிட்னி)

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இருந்து இலங்கையை நீக்க வேண்டும் என்று கோரி அவுஸ்திரேலிய செனட்டில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனை தோற்கடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலிய கான்பராவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

போர்க் குற்றங்கள் தொடர்பில் இலங்கை உரிய விசாரணைகளை நடத்தவில்லை என்று குற்றம் சுமத்தி அவுஸ்திரேலிய ஆளும் கட்சியின் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.செயலரை சந்திக்க ஜனாதிபதி மகிந்த முயற்சி!

### இந்திய பிரதமரைச் சந்திக்கவும் திட்டம்



ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 66ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூன் மற்றும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

நியூயோர்க்கில் பல்வேறு நாடுகளின் தலைவர்களை தனித் தனியாகச் சந்தித்து ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்திவருகிறார். இச் சந்திப்புகளின் போது இரு தரப்பினருக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேம்படுத்திக் கொள்வது குறித்து பேச்சுவார்த்தை நடத்திய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இலங்கையின் தேசிய நல்லிணக்க முயற்சிகள் குறித்தும் விளக்கியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (20ஆம் பக்கம் பார்க்க)

## வாள் காட்டி நகைகள் கேட்டு கொள்ளையர்கள் அட்டகாசம்

### வைத்தியர்கள் உட்பட மூவர் படுகாயம்

### கொக்குவிலில் தொடரும் பதற்றம்

கொக்குவில் கிழக்கில் உள்ள இரண்டு வீடுகளுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் ஆயுதங்களைக் காட்டி நகைகளை கொள்ளையடித்து சென்றதோடு வைத்தியர் உட்பட மூவரை வாளினால் வெட்டிக் காயப்படுத்தியுமுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, கொக்குவில் கிழக்கில் நேற்று அதிகாலை 2.00 மணியளவில் வைத்தியர் ஒருவரின் வீட்டிற்குள் நுழைந்த நான்கு பேர் கொண்ட கொள்ளையர் குழு வாளினைக் காட்டி தங்க நகைகளை தருமாறு கேட்டு அங்கிருந்தவர்களை தாக்கியுள்ளது.

அதிகாலை வேளை வீட்டிலிருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவேளை சமையல் அறையின் புகைக்கூட்டின் வழியாக உள்நுழைந்த இந்த கொள்ளையர் குழு வாளைக் காட்டி ஆயுதமுனையில் அனைவரையும் நிறுத்தியுள்ளது.

இதேவேளை திருடர் என கூச்சலிட்ட வயோதிபரை வாளினால் தலையில் வெட்டி காயப்படுத்தியுமுள்ளது.

அத்தோடு (20ஆம் பக்கம் பார்க்க)

## தூக்கில் தொங்கிய நிலையில் மதகுருவின் சடலம் மீட்பு

### ஊர்காவற்றுறையில் மர்மம்

(வேலணை)

ஊர்காவற்றுறை காளி கோவிலடியில் உள்ள வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் மதகுரு ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதியைச் சேர்ந்த சந்திரசேகர் ஐயர் இராஜசேகரசர்மா (வயது 31) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலத்தை ஊர்காவற்றுறை நீதவான் ஜோய் மகிழ் மகாதேவா நேரில் சென்று பார்வையிட்டார்.

ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவரது மரணம் தொடர்பில் மர்மம் நிலவுவதாக தெரிவிக்கப்பட்டது. (எ- 6)

## மர்ம நபர்கள் தாக்கியதில் குடும்பஸ்தர் ஸ்தலத்தில் பலி

### மனைவியும் மகனும் படுகாயம்

### வேலணையில் நேற்று அதிகாலை சம்பவம்

வீட்டிற்குள் நுழைந்த மர்ம நபர்கள் கூரிய ஆயுதங்களினால் சரமாரியாகத் தாக்கியதில் குடும்பஸ்தர் ஸ்தலத்தில் பலியானதோடு அவரது மனைவியும் மகனும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் வேலணை இரண்டாம் வட்டாரத்திலுள்ள செல்வநாயகம் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் 4 பிள்ளைகளின் தந்தையான சபரிமுத்து யேசுதாசன் (வயது 57) என்ற குடும்பஸ்தர் வாள் வெட்டுக்கிலக்காகி பலியானவராவார்.

அவரது மனைவி யேசுதாசன் ரஞ்சனாதேவி (வயது-43), யேசுதாசன் முகுந்தன் (வயது-18) ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலத்தை ஊர்காவற்றுறை நீதவான் ஜோய் மகிழ் மகாதேவா நேரில் சென்று பார்வையிட்டதோடு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## சீனாவில் வெள்ளம் 175 பேர் பலி

(பீஜிங்)

சீனாவில் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளத்தில் சுமார் 175 பேர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுவதாக அந்நாட்டு உள்நாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

சீனாவில் கடந்த யூன் மாதம் முதல் தொடர்மழை பெய்து வருவதால் அந்நாட்டிலுள்ள அனைத்து நீர்நிலைகளும் நிரம்பி வழிகின்றன.

இந்த தொடர் மழையால் பாதிக்கப்பட்டு அண்மையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், எண்பதுக்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர்.

இந் (20ஆம் பக்கம் பார்க்க)

## பூமியைத் தாக்குமா? செயற்கைக்கோள்

இருபது ஆண்டுகளுக்கு முன் நாசா அனுப்பிய செயற்கைக்கோள் இன்று பூமியைத் தாக்கலாம் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் 1991-ம் ஆண்டு 3 ஆயிரத்து 525 கோடி ரூபாய் செலவில் உயர் வளிமண்டல ஆராய்ச்சி செயற்கைக்கோளை (யு.ஏ.ஆர்.எஸ்.) ஏவியது. இது பூமியின் வளிமண்டலம் குறித்த தகவல்களை திரட்டித் தந்து கொண்டிருந்தது. 14 ஆண்டுகள் தகவல்களை அனுப்பிய யு.ஏ.ஆர்.எஸ். 2005-ம் ஆண்டு செயலிழந்தது.


ஒரு பஸ் அளவுள்ள இந்த செயற்கைக்கோளின் எடை 5670 கிலோ. விண்வெளியில் சுற்றி வந்த இந்த செயற்கை கோள் தற்போது பூமியின் வளிமண்டலத்தில் நுழைய வுள்ளது.

அப்போது அது 1 006 துண்டுகளாக வெடித்துச் சிதறும். இதில் பெரும்பகுதி வளி மண்டலத்தில் நுழையும்போது எரித்து சாம்பலா கி விடும். இருப்பினும் 26 துண்டு கள் பூமியைத் தாக்கும் அபாயம் உள்ளது.

வெடித்து சிதறும் பாகங்கள் 150 கிலோ வரை எடைகொண்டவையாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இது எப்போது விண்வெளியிலிருந்து கிளம்பும் என சரியாக ஆராய்ச் (20ஆம் பக்கம் பார்க்க)

## உரிய நடவடிக்கைகளை ஐ.நா.மேற்கொள்ளவில்லை

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு




இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக் குழு தோல்வியைச் சந்தித்துள்ளதாக மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் நேற்று குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கடந்த ஒரு ஆண்டு செயற்பாடுகள் குறித்து மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் நேற்று ஜெனிவாவில் வெளியிட்டுள்ள அறிக்கையிலே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் 2010-ம் ஆண்டு ஜுலை மாதம் முதல் 2011-ம் ஆண்டு யூன் மாதம் வரையான காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் செயற்பாடுகள் குறித்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

ஐக்கிய (19ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வர்த்தகப் பெருமக்களே...
வியாபாரத்தைப் பதிவு செய்தல்
பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
VTL மெனேஜ்மென்ட்
கொழும்பு-03
0729994777
0117902938

# கௌரவ ஆளுனர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

வடமாகாணத்தின் கலை இலக்கியத் துறையில் தடம் பதித்த கலைஞர்களுக்கான உயரிய விருதான 'கௌரவ ஆளுனர் விருது' மன்னாரில் நடைபெறும் 2011 ஆம் ஆண்டிக்கான தமிழ் இலக்கிய விழாவின் நிறைவு நாளில் வழங்கப்படவுள்ளதாக வடமாகாண கல்விப் பண்பாட்டலுவலர்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய விருதினைப் பெறும் கலைஞர்களின் விபரங்கள் வருமாறு,

கலாபூசணம் அன்ரனி பாலதாஸ்-நாட்டுக்கூத்து (யாழ்ப்பாணம்), கலாபூசணம் சுப்பிரமணிய ஆசாரி பாஸ்கரன் ஆசாரி- சிற்பம்- (நல்லூர்), கலாபூசணம் ஞானகுமாரி சிவனேசன்-இசை (வாய்ப்பாட்டு)-(உடுவில்), சங்கீதவித்துவான் பொன் ஸ்ரீவாமதேவன்-இசை(வாய்ப்பாட்டு)-(சாவகச்சேரி), திரு.ஐயாத்துரை சண்முகலிங்கம் - சிறுகதை இலக்கியம்-(சுரவெட்டி), கலாபூசணம் விமலலோஜினி கனகேஸ்வரன்-இசை (வயலின்)- (வவுனியா), திரு கபுராலகே பத்தரால-பாரம்பரிய கலைகள்-(வவுனியா-தெற்கு), கலாபூசணம் சூசை சந்தியா - நாட்டுக்கூத்து-(பூநகரி), கலாபூசணம் செபஸ்தியான் மாசிலாமணி-இசை நாடகம்-(மன்னார்), திரு. இராமு முருகுப்பிள்ளை-பாரம்பரிய கலைகள் -(முல்லைத்தீவு), கலாபூசணம் ஜனாப். அப்துல்காதர் அஸிம்- பல்துறை- (யாழ்ப்பாணம்), திரு அலெக்ஸ்சாண்டர் அலெக்ஸ்-பல்துறை-(மடு), கலாபூசணம் அகஸ்ரின் வேதானந்தம் - சிற்பம்- (தெல்லிப் பழை) (4-2-12)

நன்றியுடன் வாழ்த்துகின்றோம்

ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட சம்மேளனம் 2010ம் ஆண்டு லீக்குகளுக்கிடையில் நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சாம்பியன் கிண்ணத்தை தனதாக்கிய பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் வீரர்களுக்கான உதைபந்தாட்ட உபகரண தொகுதியை அன்பளிப்புச் செய்த, வடமாகாண ஆளுநர்



உயர்திரு. G.A. சந்திரசிறி (மேஜர் ஜெனரல்)
அவர்களுக்கு நன்றி கலந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிறைவேற்றுக்குழு
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்
(சி-4522)

வீடு விற்பனைக்கு

இல.47, மணிக்கூட்டு வீதியில் (நீராவியடி) உள்ள பரப்பு-1 3 1/2 குளி கிணறுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்புக்கு
தொ.பே :- 0779711498
0212222537
(6401)

விற்பனைக்கு

அரிந்த கொங்கிறீற் கல்லு, அரிந்த கொங்கிறீற் தூண், பூநகரி கண்டாவளை மணல், நாகர்கோவில் மணல் என்பன விற்பனைக்கு உண்டு. டிரக்டர் மூலமாக விநியோகித்து கொள்ளக் கூடிய வசதி உண்டு. கட்டிட ஒப்பந்தகாரர்களுக்கு விசேட சலுகை உண்டு.

தொடர்புகளுக்கு :- 0777703049
(சி-4523)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
The Only Official French Language Centre in Jaffna
Learn French the French Way
சர்வதேச மொழியான French மொழியை எவரும் இலகுவாக கற்றுக் கொள்ளலாம்...
6 மாதத்தில் முதலாவது உள்ளக பரீட்சைக்கு தோற்றலாம்.
வகுப்புகள்: சனி, ஞாயிறுகளில்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo. com
(றக்கா வீதியும் கச்சேரி -நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)
மேலதிக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாக பெறலாம்.
(5826)

மோட்டார் சைக்கிள் விற்பனை
யப்பானில் சிறிது காலம் பாவனை செய்யப்பட்ட
C50 HONDA LANCER
(Recondition)
செய்யப்படாத





(முற்றுமுழுதாக)
ஒறியினல் உதிரிப் பாகங்களுடன் பெற்றுக் கொள்ளலாம்.
நீங்கள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
S.P.N மோட்டோர்ஸ்
145, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(சி-4513)

# விரைவுபடுத்தல் தத்துவமும் இரட்டைத் தன்மைப் பிரயோகமும்

ஒரு ஒப்பந்தத்தின் வலிதான இரு கூறுகளாக இருக்க வேண்டியவை வலிதான முனைவும் ஏற்பும் ஆகும். வலிதான முனைவும் ஏற்பும் ஒன்றுடன் ஒன்று சந்தித்துவிட்டால் இருமனங்களின் இணக்கமான சந்திப்பின் அடிப்படையில் உருவாகுவது ஒப்பந்தமாகும். சட்டஅறிஞர் ANSEN கூற்றுப்படி எரிந்து கொண்டிருக்கும் தீக்குச்சியை வெடிமருந்து வரிசைக்கு வைத்தால் அதனை எப்படி மீட்டெடுக்க முடியாதோ அதே போன்று முனைவும் ஏற்பும் சந்தித்து விடுமானால் பின்பு முனைவினையோ, ஏற்பினையோ எக்காரணம் கொண்டும் மீட்டெடுக்க முடியாது.

ADAMS - Vs- LINSDELL (1818) எனும் வழக்கில் ஏற்பு முற்றுப் பெறுவதில் ஏற்பினை துரிதப்படுத்துவது 'விரைவுபடுத்தல் தத்துவமே' என்பது முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இத் தத்துவத்தின்படி ஏற்புக்கடிதம் அஞ்சல் பெட்டியில் சேர்ப்பித்ததும் விரைவுபடுத்தல் தத்துவத்தின் துரித செயற்பாட்டினால் ஒப்பந்தம் உடனடியாக உருவாகிவிடும். பின்பு முனைவை எக்காரணம் கொண்டும் வாபஸ் பெறமுடியாது.

ஏற்புக்கடிதம், காலதாமதமாக முனைவை செய்தவருக்கு கிடைத்தாலோ அல்லது அஞ்சல் சேவையில் தொலைந்தாலோ அத்தகைய இழப்புக்கள் யாவற்றிற்கும் முனைவை செய்தவரே பொறுப்பாவார். காரணம் அஞ்சல் நிறுவனம் முனைவை செய்தவரின் முகவராக செயற்படுவதாக சட்டம் கருதுகிறது. இதேபோலவே Fax (பக்ஸ்) மூலம் முனைவு செய்யப்பட்டால், ஏற்பும் Fax (பக்ஸ்) மூலமே செய்யப்படவேண்டும். ஏற்புக்கடிதம் Fax (பக்ஸ்) மூலம் கொடுக்கப்படும் போது அவ் ஏற்புக்கடிதம் தெளிவற்ற நிலையில் முனைவை செய்தவருக்கு கிடைக்குமானால் அத்தகைய அசாதாரண நிகழ்வுகளுக்கு முனைவை செய்தவரே பொறுப்பாவார்.

இன்றைய வியாபார உலகில் A என்பவர் தனது பொருளை B என்பவருக்கு விற்பதற்கான முனைவை தபால் மூலமோ அல்லது Fax (பக்ஸ்) மூலமோ செய்கிறார். B அம் முனைவினை ஏற்று ஏற்புக்கடிதத்தை அஞ்சல் நிறுவனத்தில் ஒப்படைத்துவிடுகிறார். விரைவுபடுத்தல் தத்துவத்தின்படி உடனே ஒப்பந்தம் உருவாகிவிடுகிறது.

ஏற்பு முற்றுப் பெற்றதும் பொருளின் விலை சந்தையில் எதிர்பாராத விதமாக திடீரென உயர்ந்து விடுகிறது. எனவே விரைவுபடுத்தல் தத்துவம் இல்லாவிடின் முனைவை செய்தவர் தனது முனைவினை வாபஸ் பெற்றுவிடுவார். இச்சந்தர்ப்பத்தில், 'விரைவுபடுத்தல் தத்துவம்' ஏற்பினை செய்தவருக்கு காப்பரணாக இருப்பதனைக் காணலாம்.

மறுவகையாகப் பார்க்கும் போது A என்பவரால் B என்பவருக்கு முனைவு செய்யப்பட்டபின் B அம் முனைவினை ஏற்று ஏற்புக்கடிதத்தை அஞ்சல் நிறுவனத்தில் சேர்த்துவிட்டதும் ஏற்பு முற்றுப் பெற்று விடுகிறது. ஏற்பு முற்றுப் பெற்றதும் உடனடியாக சந்தையிலே குறித்த பொருளின் விலை எதிர்பாராத விதமாக வீழ்ச்சியடைந்து விடுகிறது. இதனால் ஏற்பு செய்தவர் விரைவுபடுத்தல் தத்துவம் இல்லாவிடின் தனது ஏற்பினை வாபஸ் பெற்றுவிடுவார். இச்சந்தர்ப்பத்தில் 'விரைவுபடுத்தல் தத்துவம்' முனைவை அழியவிடாமல் முனைவிற்கு காப்பரணாக இங்கு இருப்பதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

எனவே தொகுத்துப் பார்க்குமிடத்து பொருளின் விலை ஏற்றத்தினால் ஏற்புக்கும் விலை வீழ்ச்சியினால் முனைவுக்கும் ஒரே 'விரைவுபடுத்தல் தத்துவம்' காப்பரணாக மாறி மாறி செயற்படும் இரட்டைத்தன்மைப் பிரயோகத்தினை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

எத்தகைய புதிய புதிய தகவல் தொழில் நுட்பங்கள் தோன்றினாலும் அத்தகைய தொழில்நுட்பங்களின் முன்னேற்றங்கள் யாவற்றையும் தன்னகத்தே உள்ளடக்கி செயற்படும் விரைவுபடுத்தல் தத்துவத்தின் இரட்டைத்தன்மைப் பிரயோகமானது ADAMS - Vs- LINSDELL (1818) என்னும் வழக்கின் தீர்ப்பிலிருந்து கிட்டத்தட்ட இருநூறு (200) வருடங்களாக இன்றுவரை தனது ஸ்திரத்தன்மையுடனேயே இருப்பதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

மறைந்த
ஈழத்துக் காந்தி
எஸ்.ஜே.வி. செல்வநாயகத்திற்கு
என் சமர்ப்பணம்

இ. சோதிநாதன்
பகுதி நேர சட்ட விரிவுரையாளர்
தொழில்நுட்பக் கல்லூரி
யாழ்ப்பாணம்

(இ)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
தரம் 6 அனுமதி - 2012
2011ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 151 புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் எமது கல்லூரியில் தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பத்தினை அலுவலக நேரத்தில் பெற்று 30.09.2011க்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
(சி-4517)

அநேகர் வாழ்வில் நம்பமுடியாத அதிசயங்களை வழங்கிவரும்
சோ.கூ.றே.மணிமேர்க்கஸ் பெட்டகம்
சங்கடங்கள் விலகுகின்றன...
துன்பங்கள் துரத்தப்படுகின்றன...
பிரச்சினைகள் பின்வாங்குகின்றன...
* செல்வம் * ஞானம் * அதிர்ஷ்டம் * புகழ் கிடைக்கிறது
விலை ரூபா 5100.00
விரைவில் அற்புதமான மாற்றங்கள் உங்கள் வாழ்வில் அதிஷயமாக நிகழ்வதை நீங்களே உணர்வீர்கள்
உங்கள் இருப்பிடங்களுக்கு தருவிப்பதற்கு அழையுங்கள் 0771399950
விநியோகஸ்தர்கள் தேவை
வடமராட்சி, தென்மராட்சி, யாழ்நகர், தீவகம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களுக்கு விநியோகஸ்தர்கள் தேவைப்படுகின்றனர்.
வயதெல்லை : 18 - 30 வரை
கல்வித்தகைமை : G.C.E (A/L)
சம்பளம் : 25000/-
தகுதியும் ஆர்வமும் உடையவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
(6198)

## இன்று ஒரு தகவல்

# ஆசைக்கோர் அளவில்லை!

ஒரு ஊரிலே கடவுள் பக்தர் ஒருவர் இருந்தார். அவர் தினமும் கோவிலுக்குச் சென்று வழிபட்டு வந்தார்.

ஒருநாள் அவர் கோவிலுக்குச் சென்று கடவுளிடம் "எனக்கு ஒரு இலட்சம் ரூபாய் நீ கொடுத்தால், நான் உன் சந்நிதியில் ஒரு தேங்காய் உடைக்கிறேன்" என்று வேண்டினார்.

கடவுள் உடனே அவர் கண் முன்னாடி தோன்றி, "நீ கேட்ட ஒரு இலட்சம் ரூபாய்" என்று அவன் கையிலே பணத்தைக் கொடுத்து விட்டு மறைந்தார்.

இவனால் நம்பமுடியவில்லை. இவ்வளவு சுலபமாகக் கிடைக்கும் என்று தெரிந்திருந்தால் அநாவசியமாக ஒரு தேங்காய் உடைக்கிறேன் என்று வேண்டியிருக்கமாட்டேன். இருந்தாலும் வேண்டுதலை நிறைவேற்ற வேண்டியது கடமையாகும் என்று நினைத்தார்.

உடனே பக்கத்தில் உள்ள கடையொன்றிற்குச் சென்றான். ஒரு தேங்காயைக் கையில் எடுத்தான். "இது என்ன விலை" என்று முதலாளியிடம் கேட்டான்.

"ஐந்து ரூபாய்" என்றார் கடையில் இருந்தவர்.

"விலை அதிகமாக இருக்கிறதே" என்றான். "அப்படியென்றால் ஒன்று செய்யுங்கள்... அடுத்த ஊருக்குப்போய் அங்கே உள்ள தென்னந்தோப்பில் இதைவிட குறைந்த விலைக்கு தேங்காய் வாங்கலாம்" என்றான்.

"சரி" என்று கூறிவிட்டு அடுத்த ஊருக்குக் கிளம்பினான்.

அங்கே போய் விசாரித்தான். "ஒரு தேங்காய் மூன்று ரூபாய் விலை" என்றார்கள். "இதுவும் அதிகமாகத் தெரிகிறது" என்றார். "அப்படியென்றால், அதோ பார்... அந்த ஆற்றோரமாக ஒரு தென்னை மரம் இருக்கிறது. அதிலே நீயே ஏறி பறித்துக்கொள். ஒரு தேங்காய் ஒரு ரூபாய்" என்று தோப்பிற்குச் சொந்தக்காரன் கூறினான்.

இவனுக்கு மரம் ஏறத்தெரியாது. இருந்தாலும் ஆசை யாரை விட்டது? விலையும் அதிகமாக இருந்தது. ஆற்றோரமாகச் சென்றார். தட்டுத்தடுமாறி அந்த மரத்தில் ஏறினார். அந்தத் தென்னைமரம் வளைந்து ஆற்றுப் பக்கமாகப் போய் அப்புறம் நிமிர்ந்தது. அதாவது மரத்தின் உச்சி சரியாக ஆற்றுக்கு நடுவில் இருந்தது.

இவர் கடவுள் கொடுத்த ஒரு இலட்சம் ரூபாவை மடியிலே இறுக்கிக் கட்டினார். உச்சிக்குப் போய் தேங்காய் பறிக்கிற சமயத்தில் காற்றும் மழையும் பலமாக கலந்து அடிக்க ஆரம்பித்தது.

இவனது கால் வழுக்கி விட்டது. சட்டென்று ஒரு மட்டையைப் பிடித்துக்கொண்டு தொங்கினான். கீழே பயங்கர வெள்ளம். மடியில் ஒரு இலட்சம் ரூபாய் பணம். இவனது மனம் பதற ஆரம்பித்தது. இந்தச் சமயம் கரையிலே ஒரு யானைப் பாகன் யானையைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்ததை பார்த்தான்.

"ஐயா" ஒரு உதவி என்று கத்தினான். அவன் "என்ன வேண்டுமென்று" கேட்டான். "உன் யானையை மெதுவாக அழைத்து வந்து எனக்கு நேராக நிறுத்தி என் காலைப்பிடித்து கீழே இறக்கி விடு என் மடியில் இருக்கும் 10 ஆயிரம் ரூபாவைத் தருகிறேன்" என்றான்.

அவன் பார்த்தான் கால், கை என்பவற்றை இந்தக் காலத்தில் பிடித்துவிட்டால்கூட 10 ஆயிரம் எவருமே தரமாட்டார்கள். இவன் காலைப் பிடித்தால் 10 ஆயிரம் தருகிறேன் என்று கூறுகிறான்.

சிறிது நேரம் யோசித்தான். உடனே யானையை அவன் அருகில் கொண்டு சென்று நிறுத்தினான். அவன் காலைப் பிடித்தான். அவ்வளவுதான் அவ்வேளையில் யானை மெதுவாக நடந்து அப்பாலே சென்று விட்டது. இப்போது யானைப்பாகன் இவன் காலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தொங்கினான்.

இப்போது யானைப் பாகன் சொன்னான், தம்பி!... மட்டையை விடாதே!... கெட்டியாகப் பிடித்துக்கொள்! நான் உனக்கு 10 ஆயிரம் பணம் தருகிறேன்... இதோ மடியில்தான் வைத்திருக்கிறேன்! என்றான்.

மேலே தொங்கிறவனுக்கும் இந்த நிலைமையிலும் ஒரு பெரிய சந்தோஷம்... மேற்கொண்டு ஒரு 10 ஆயிரம் பணம் தனக்கு கிடைக்கும் போல் இருக்கிறதே என்று நினைத்து தனது மனதைத் தேற்றிக்கொண்டான்.

இந்தச் சமயத்தில் ஒருவன் ஒட்டகத்தை குளிப்பாட்டிக் கொண்டு இருப்பதை இந்த யானைப்பாகன் கண்டுவிட்டான்.

"ஐயா... ஒட்டகக்காரரே... அதை இங்கே கொண்டு வாருங்கள். எங்கள் காலைப்பிடித்து இறக்கி விடுங்கள். நாங்கள் பணம் தருகிறோம்" என்றான்.

அவனும் பணத்திற்கு ஆசைப்பட்டு வந்து அவனது காலைப் பிடித்த சமயம்... ஒட்டகமும் நழுவிப்போய் விட்டது.

இப்போது மூன்று பேரும் வரிசையாகத் தொங்கிக் கொண்டிருந்தார்கள். "தம்பி... மட்டையை விட்டுடாதே! கெட்டியாகப் பிடித்துக் கொள்... நான் என் மடியிலே இருக்கிற 5 ஆயிரம் ரூபாவை உனக்குத் தருகிறேன்" என்றான்.

மேலே தொங்கிறவனுக்கும் இன்னமும் சந்தோஷம். இவனும் பணம் தருகிறேன் என்று கூறுகிறான். அப்படியென்றால் இன்றைக்கு நமக்கு மொத்த வரவு எவ்வளவு... என்று ஒவ்வொன்றாகக் கூட்டிப் பார்த்தான். மனக்கணக்கு சரியாக வரவில்லை. உடனே விரலைவிட்டு எண்ண ஆரம்பித்தான். அவ்வளவுதான் மட்டையை விட்டு கை நழுவி வந்துவிட்டது.

மூன்று பேரும் 'பொத்தென' ஆற்றிலே விழுந்தார்கள்.

படாத பாடுபட்டு... தட்டு தடுமாறி கரைக்கு வந்து சேந்தார்கள். மூன்று பேரின் மடியில் வைத்திருந்த பணமும் ஆற்றோடு அள்ளுண்டு சென்று விட்டது.

"பேராசை பெரும் நட்டம்" அப்படியென்று ஒரு பழமொழி உள்ளது. அதை விளக்குவதற்காகத்தான் இக் கதை கூறப்பட்டது.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தமிழக அகதி முகாமிலிருந்து 40 பேர் கப்பல்மூலம் அழைத்துவரப்படவுள்ளனர்

(கொழும்பு)

தமிழக அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கையர்களில் 40 பேர் அடுத்த மாதம் கப்பல் மூலம் இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சின் தேசிய திட்ட ஒருங்கிணைப்பாளர் ராசிக் தெரிவித்துள்ளார்.

முதலாவது தொகுதியினர் எதிர்வரும் ஒக்டோபர் 12 ஆம் திகதி தூத்துக்குடி- கொழும்பு கப்பல் சேவை மூலம் நாடு திரும்ப விருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ் ஆண்டில் மாத்திரம் இந்தியாவின் தமிழக முகாம்களிலிருந்து ஆயிரத்து 748 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர். இவர்கள் விமானங்கள் மூலம் இலங்கை வந்தடைந்தனர்.

எதிர்வரும் காலங்களில் இவர்களை கப்பலில் அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் இதன் பின்னர் இலங்கை வருபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2007 ஆம் ஆண்டு முதல் இதுவரை 7 ஆயிரத்து 619 பேர் நாடு திரும்பியுள்ளனர். இவ்வாறு நாடு திரும்புபவர்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நாடு திரும்ப விரும்புவர்களுக்கான பிரயாணப்பத்திரம் மற்றும் பயணச்சீட்டு என்பன யூ.என். எச்.சி.ஆர். அமைப்பால் வழங்கப்படுவது என அவர் குறிப்பிட்டார்.

நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதுடன் அரசாங்கத்தால் நிவாரணம் வழங்கப்படுகிறது. சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கான தற்காலிக கூடாரங்கள் உள்ளிட்ட உதவிகள் மாவட்ட செயலகத்தினால் வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழகத்திலிருந்து மீள்குடியேற்றத்திற்காக வரும் இலங்கை தமிழர்களை கப்பல் மூலம் வருமாறு மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கேட்டுக்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-2)

# காரைநகர் பிரதேச சபையின் டெங்கு நோய் விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் பரவி வருகின்ற டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் காரைநகர் பிரதேச சபையினரால் டெங்கு நோய் முன்னெச்சரிக்கை பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக இப் பிரதேசசபை தலைவர் மு.ஆ. வே.ஆறுமுகன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய காணி உரிமையாளர்கள் தங்கள் சொந்தக் காணிகளை துப்பரவு செய்வதோடு உரிமையாளரில்லாத காணிகளுக்கு பொறுப்பாக இருப்பவர்கள் அக்காணியை துப்பரவு செய்திருத்தல் வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தவறும் பட்சத்தில் உரிமையாளரை இனம் கண்டு 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நுளம்புப் பெருக்கத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2-12)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 80 |
| தக்காளி | 30 | 40 | 40 |
| மரவள்ளிக் கிழங்கு | 35 | 30 | 40 |
| கோவா | 30 | 40 | 50 |
| கரட் | 50 | 100 | 60 |
| பூசணி | 25 | 30 | 25 |
| புடோல் | 30 | 20 | 30 |
| வாழைக்காய் | 40 | 35 | 35 |
| சின்ன வெங்காயம் | 90 | 40 | 90 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 80 |
| பாகற்காய் | 70 | 120 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 70 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | 100 |
| பயற்றங்காய் | 30 | 90 | 50 |
| லீக்ஸ் | 50 | 60 | 50 |
| பீற்றூட் | 15 | 15 | 15 |
| கறிமிளகாய் | 30 | 40 | 40 |
| முருங்கைக்காய் | 40 | 80 | 80 |
| போஞ்சி | -- | 110 | 100 |
| கத்தரிதம்புள்ள | 25 | 30 | 20 |
| கீரை - 1 பிடி | 8 | 20 | 15 |
| தேசிக்காய் | 180 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# இராசி பலன்

23.09.2011
(புரட்டாதி 6, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 1.12 மணிவரை
பூசம் முன்னிரவு 10.53 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
ஏகாதசி விரதம்.

**மேடம்** தொலைபேசி மூலம் பொன்னான செய்திகள் வந்து சேரும் நாள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**இடபம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழி அனுகூலமுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்** மாமன், மைத்துனர் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரும், பேச்சில் கனிவு பிறக்கும், புதிய நட்பால் பொருளாதார விருத்திக்கு அடித்தளமிடுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்** அம்பிகை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், கற்பனைகள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள்.

**சிங்கம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், மாலை நேரம் ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சயன சுகக்குறைவான நாள், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும்.

**கன்னி** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், திடீர் பண வரவு மனதிற்கு சந்தோசத்தைக் கொடுக்கும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** அருமையான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிட்டும், பொதுவாழ்வில் புகழ் கூடும், எதிர்பாராத பண வரவுகள் வந்து சேரும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரும், எதிர்பார்த்த காரியமொன்று இன்று காலையிலேயே நடைபெறலாம், பயணங்களால் பலனுண்டு, தொழில் வளர்ச்சிக்கு பெண்கள் வழி ஒத்துழைப்புக் கிடைக்கலாம்.

**தனுசு** காரிய வெற்றிக்கு கந்தனை வழிபட வேண்டிய நாள், திட்டமிட்ட பணிகளில் திடீர் தடை தாமதங்களைச் சந்திக்க நேரிடலாம், பயணத்தால் மன உளைச்சல்கள் ஏற்படலாம்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும்நாள், சொந்த பந்தங்களின் வருகையுண்டு, களஸ்திர நன்மையுண்டு, செய்தொழிலால் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்** உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், பகைவர்கள் விலகுவர், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம்.

**மீனம்** பெற்றோர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள், பண வரவு திருப்தி தரும், சுப செய்திகள் வந்து சேரலாம், சொத்துக்கள் தொடர்பில் எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

வளவன்

# சைவத் தமிழ் பணியில் பற்றுறுதி கொண்ட மலேசியத்தமிழர் கலாநிதி ஹரிகிருஷ்ணன்

## பண்பாடு வழுவாத வாழ்க்கை என்பது சமயக் கல்வி மூலமே கிடைக்கக்கூடியது

எங்கள் யாழ்ப்பாணத்தின் பெருமைப் பற்றி நாம் பேசுவதை விட மற்றவர்கள் எங்கள் பெருமை பற்றிப் பேசும் போது இருக்கக் கூடிய ஆனந்தம் அளவிற்கரியது.

அண்மையில் மலேசிய நாட்டின் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ஹரிகிருஷ்ணன் அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார். அவரை சந்திக்கின்ற வாய்ப்புக் கிடைத்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் அவர்களின் உதவியோடு கலாநிதி ஹரிகிருஷ்ணனைச் சந்தித்தோம்.

யாழ்ப்பாணத்துத் தமிழுக்கு நிகரான தமிழ் உச்சரிப்பு, ஆங்கிலச் சொற்கலப்பில்லாமல் தமிழைப் பேசவேண்டும் என்பதில் அவரிடமிருந்த உறுதிப்பாடு என்பவற்றைப் பார்த்தபோது வியந்துபோனோம்.

இதற்கு அப்பால் அவரிடம் இருந்த தமிழ்ப் பற்றும், சைவ சமயத்தின்பால் கொண்ட ஈடுபாடும் எங்களை மேலும் வியக்கவைத்தன.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த கலாநிதி ஹரிகிருஷ்ணன் அவர்கள் கணிதத் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். இருந்தும் தமிழ்மொழி மீது அவருக்கு இருந்த பற்றை நினைத்தபோது நெஞ்சம் நெகிழ்ந்து கொண்டோம். க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகளில் கல்விகற்று விட்டாலே, தமிழ், சைவம் பற்றிப் பேசுவதைத் தவிர்த்துக்கொள்ளும் மூடக் கலாசாரத்திற்குள் மூழ்கிக் கிடக்கும் எங்கள் மண்ணில், ஜப்பான் நாட்டில் பிரயோக கணிதத்தில் (Applied Maths) கலாநிதிப் பட்டம் முடித்த ஹரிகிருஷ்ணன் அவர்கள் தமிழின் சுவை பற்றி, அதன் இனிமை பற்றிக் கூறியபோது எங்கள் அறியாமையை உணர்ந்து வெதும்பிக் கொண்டோம்.


ஒரு இனம் தனது பண்பாடு, கலாசார விழுமியங்களோடு வாழ வேண்டுமாயின் தாய்மொழியூடாகக் கல்வியை மேற்கொள்ள வேண்டும் என்பது ஹரிகிருஷ்ணனின் இறுக்கமான முடிபு.

இலங்கையில் உயர்தரத்தில் கணிதத்தை தமிழ்மொழியில் மாணவர்கள் கற்பதை அறிந்து பேரானந்தப்பட்ட அவர், கணிதத்தில் பயன்படுத்தப்படும் தமிழ்ச் சொற்களைப் பார்த்தபோது தான் பிரமித்துப் போனதாகக் கூறினார்.

தமிழ் மொழியூடாக கணிதத்தை உயர்தரத்தில் கற்பது, தமிழ் மக்களுக்குப் பெருமை தரக்கூடியது என்றும் புகழாரம் சூட்டிக் கொண்டார்.

தமிழ்நாட்டின் சேலம் மாவட்டத்தில் இருந்து மூன்று தலைமுறைகளுக்கு முன்னர் மலேசிய நாட்டில் குடியமர்ந்த தமிழர்களே இன்றைய மலேசிய நாட்டு தமிழர்கள்.

மலே மொழியின் ஆதிக்கமும் இஸ்லாத்தின் இறுக்கமும், இலங்கை போன்ற இனத்துவ ரீதியான பாகுபாடும் மலேசியாவில் மலிந்திருந்தாலும், அந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள் தமது தாய்மொழி மீதும் சைவசமயத்தின் மீதும் கொண்டுள்ள பக்தியின் வைராக்கியத்தை கலாநிதி ஹரிகிருஷ்ணனின் கருத்துக்கள் வெளிப்படுத்தின.



பாடசாலைக் கல்வியில் உயர் கல்வி வரையும் பல்கலைக்கழகத்தில் கலைத் துறையிலும் தமிழ் மொழியில் கற்கக் கூடிய வாய்ப்பு இருப்பதையிட்டுப் பெருமை கொள்ளும் அவர், மலேசியாவில் 6 ஆம் தரத்துடன் தமிழ் மொழியில் கற்கும் சந்தர்ப்பம் முடிந்து விடுவதாக வேதனைப்பட்டுக் கொண்டார்.

மலேசிய நாட்டுத் தமிழ் மாணவன் ஒருவன் தரம் 6 வரையே தமிழ் மொழி மூலமாகக் கல்வி கற்க முடியும். அதன் பின்னர் மலே மொழி அல்லது ஆங்கில மொழியிலேயே பாடத்தைக் கற்க முடியும். தேவையாயின் தமிழ்மொழியை ஒரு பாடமாகக் கற்கமுடியும்.

எனினும்,இப்போது மலேசியாவில் தமிழ் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் பெற்றோர்களிடம் வலுத்து வருவதைக் காணமுடிகின்றது என்றார்.

### தமிழ்ப் பணி அமைப்பு

யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழியின் பயன்பாடு கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடையும் கலாநிதி ஹரிகிருஷ்ணன் அவர்கள் மலேசியாவில் உள்ள தேசிய நிலநிதி கூட்டுறவுச் சங்கம் என்ற அமைப்பில் இருந்து கொண்டு தமிழுக்குப் பெரும் பணியாற்றுகின்றார்.

அந்த அமைப்பின் தலைமை இயக்குநர் டத்தோ பா. சகாதேவனின் அர்ப்பணிப்புடன் கூடிய தமிழ்ப் பணியைக் குறிப்பிடத் தவறாத கலாநிதி ஹரிகிருஷ்ணன் தமது தேசிய நிலநிதி கூட்டுறவுச் சங்கம் தமிழ் இலக்கியப் பணியை ஆற்றுவதில் தீவிரமாக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

தமிழ் இலக்கியம் சார்ந்த, தமிழ் வரலாறு சார்ந்த நூல்களின் வெளிவருகையில் ஆர்வம் காட்டும் இந்த அமைப்பு பேராசிரியர் ச.சத்தியசீலன் அவர்கள் எழுதிய "மலாயக் குடிபெயர்வும் யாழ்ப்பாண சமூகமும்" என்ற நூல் வெளியீட்டை 2006 ஆம் ஆண்டில் மலேசியாவில் நடத்தியது. இன்றுவரை அந்த அமைப்பு தனித்து நின்று தமிழ்ப்பணி ஆற்றுவதை அறிந்தபோது, எங்கள் யாழ்ப்பாணத்தில் அப்படியான அமைப்புக்களின் பஞ்சப்பாடு கண்டு உள்ளூர வேதனை கொண்டோம்.

மலேசியாவில் தமிழ்மக்கள் அடக்கப்பட்ட இனமாக இருக்கின்ற போதிலும் அங்குள்ள தமிழ்மக்களின் ஒற்றுமையும், தமிழ்ப் பணியாற்றும் பொது அமைப்புக்களின் அர்ப்பணிப்புடன் கூடிய செயற்றிறனும், தமிழ் மீது கொண்ட பற்றுறுதியும், மலேசியாவில் தமிழ் மக்களின் வலுவை உயர்த்தி நிற்கின்றது என்ற செய்தி எங்களுக்கான அறிவுரையாகக் கொள்ளப்பட வேண்டியதாகும்.

### மாசுபடாத சைவப்பற்று

கலாநிதி ஹரிகிருஷ்ணன் அவர்களுடனான செவ்வியில், சைவ சமயத்தின் மீது அவர் கொண்டிருந்த பற்றுதல் நம்மை மிகவும் கவர்ந்தது.

இஸ்லாமிய சமயத்தின் இறுக்கமான கொள்கை கொண்ட மலேசியாவில் சைவசமயத்தின் மீது அளவு கடந்த பற்றுக்கொண்ட ஒருவரை சந்திப்பது மட்டற்ற மகிழ்ச்சிக்குரியதாயினும், கணிதத்துறையில் கலாநிதி பட்டம் பெற்ற ஒருவர் சைவத்தின் மீது-அதனை மலேசிய நாட்டில் வழுவாது பாதுகாக்க வேண்டும் என்ற கொள்கையில் திடமாக இருப்பதென்பது சாதாரண விடயமன்று.

இலங்கையில் சைவசமய பாடம் க.பொ.த. சாதாரண தரம் வரை சைவ மாணவர்களின் பொதுக் கல்வியாக இருப்பது கண்டு வியப்புறும் அவர், தங்கள் நாட்டில் நன்னெறி என்ற பாடம் பொதுக் கல்வியாக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

தேவாரத் திருமுறைகள், வழிபாட்டு முறைகளை மாணவர்கள் செம்மையாக அறிந்திருக்க வேண்டுமாயின் அதற்கு சமயக் கல்வி அவசியம் என்பதை வலியுறுத்தும் கலாநிதி ஹரிகிருஷ்ணன், எங்கள் மாணவர்களின் சைவசமய பாடப் புத்தகங்களைப் பார்வையிடுவதில் காட்டிய அக்கறைப்பாடு நிச்சயம் மலேசியாவில் அரச பாடத்திட்டங்களுக்கு அப்பால், சைவ சமயப் பாடம் முன்னெடுக்கப்படும் என்பதை உறுதிப்படுத்தியது.

தமிழ் மீதும், சைவம் மீதும் அளவு கடந்த பற்றுக்கொண்ட மலேசிய நாட்டின் தமிழ் மகன் ஒருவரைச் சந்தித்து உரையாடியதில் இருந்து தமிழும் சைவமும் தழைத்தோங்கும் என்ற நம்பிக்கைக் கீற்றுக்களைக் கண்டு கொண்டோம். அந்தப் பரம திருப்தியில் அவரிடம் இருந்து விடை பெற்றோம்.

- விதுரன்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

**யா/நவாலி சென் பீற்றேஸ் றோ.க.த.க.பாடசாலை**
ச.கிறிஸ்ரின் அபிஷேன்-169, பா.யதுசன்-169, சி.புகழினி-158, ம.அன்ரன்யூட்-156, இ.றெபின்சன்-155.

**கிளி/புனித பற்றிமா றோ. க. த.க.பாடசாலை**
ச.டர்சன்-190,ஜே.இலக்சனா-164, ஜெ.சகானா-161,ஜெ.சிந்துயமோகன்-153.

**யா/சென் ஜோண்ஸ் கல்லூரி**
ஜி.ஆரன் மெல்வின்-179,சி.குகானந்த்-179, ரி. பிரவின்- 162,எஸ். தார்மீகன்-160,எஸ். பிரசாந்த்-159, எஸ். ஸ்ரீகுருசோத்மன்-159,ஏ.நிருஜன்- 156, ஏ.நிக்சன் அன்ரனி-153, எல். தனுஜன்-153, ஜெ.கபீசன்-152,எஸ்.சிவாசிங்கன்-152, ம. அன்ரனி ஜெயாலன்-151,ஜெ. சட்ராஜ்-151.

**கிளி/முரசுமோட்டை முருகானந்தா மகா வித்தியாலயம்**
தே.சத்திகிரி-166, வி. இலக்சலா-157, க.சரணா-154, யோ. பிரியநிதன்-153,க. லோஜீவன்-153,ம. தேசிவண்ணன்-149.

**கிளி/ பிரமந்தனாறு மகா வித்தியாலயம்**
வி.கம்சாளினி-159, ச.சதுர்சிகன்-158, த.தகவுமதி-155, கே. நிகழ்யா-151.

**கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்**
தி.கம்சாயினி-168, பி.வெல்சி-158, யோ.தரணிகா-152, பு.கீர்த்திகா-149.

**யா/புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயம்**
ஜெ. யாழ்மொழி- 165, அ.சிந்துஜா-153, பா.நிசாலினி-151.

**மு/விசுவமடு மகா வித்தியாலயம்**
ஏ.டிருஷன்- 171, கி.விதுர்ஷியா-167, வி. டிதுர்ஷா-153, அ. நெல்சன்-153, ந. அருண்-153, கை.சானுஜா-152, சு.தமிழ்ப்பிரியன்- 148.

**கிளி/திருவையாறு மகா வித்தியாலயம்**
பா.பரணிதரன்-175, யு.தமிழ்நிலவன்-147.

**யா/கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க.வித்தியாலயம்**
தி.இந்து-168, கி.அர்ச்சனா-165, இ. மிதுனன்-165, செ.நிதர்சன் -161, ஆ. அபிதன்-159, வி.லம்போதரன்-152, நி.நிவேதன்-151.

**யா/கரணவாய் மகா வித்தியாலயம்**
த.தர்மிகா-170,ந.துலக்ஷன்-169, ஜெ.நதுர்ஷிகன்-161

**யா/கரணவாய் வேதாரணீஸ்வர வித்தியாலயம்**
கு. கஜராஜிதன்-153

**யா/கரணவாய் தாமோதர வித்தியாலயம்**
ச.திருஜன்-175, சி.சசிந்தரா-171, சி.கதுர்சன்-171, ந.நிரோகினி-165, க.தாரணியா-164, சி. சாகீர்த்தியா-163, அ.லோகிதா-162, ர.மானுசா-161, ஜெ.ஜெதுர்சன்-158, சி.மாதுசன்-158, த.அர்ஜின்-154, ந.விந்துசன்-152

**யா/விக்னேஸ்வரா ஆரம்பப் பாடசாலை**
ஜெ.சுயாந்த்-160

**யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்**
த.சாதுரியா -179

**யா/மாதகல் சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை**
செ.யூட்டிலக்ஸன்-186, அ.நிவோல்ரா-170, வி.மேரிவிதுஷா-160, க.மதுஷா-159, கி.கிறிஸ்ரிக்கா-157, ஜெ. பௌஸ்ரீனா-152, ந.சுகன்யா-152

**யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்**
த.டர்மிலா-151

# உடக்குவகாளி கோயிலின் மிருக பூஜைக்கு நீதிமன்றம் தடையுத்தரவு

(கொழும்பு)
உடக்குவகாளி அம்மன் கோயில் மிருக பூஜைக்கும் நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.உடக்குவகாளி கோயிலில் வருடாந்தம் மிருகபலி பூஜை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த இம்முறைப் பூஜைகளை நடத்தக் கூடாது என புத்தளம் மேலதிக நீதிவான் ஐ.பி. இளங்கசிங்க தெரிவித்துள்ளார்.

புத்தளம் ஆராச்சிகட்டுவ உடக்குவகாளி கோயிலில் இன்றைய தினம் மிருகபலி பூஜைகள் நடத்தப்படவிருந்தன.

பூஜை வழிபாடுகள் நடைபெற்றால் பதற்ற நிலைமை ஏற்படக் கூடும் என பொலிஸார் நீதிமன்றில் அறிவித்ததனைத் தொடர்ந்து நீதிவான் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார். (4-2)


A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே , தொழில்புரிவோரே..!
எம்மிடம் HND பயிற்சி நெறியில் இணையும் மாணவர்கள் BUCKS UNIVERSITY -UK இன் பட்டப்படிப்பின் இறுதி ஆண்டை B.Sc(Hons) in Computing, B.A.(Hons) in Business & Finance ஆகிய துறைகளில் யாழ் மண்ணில் இருந்தவாறே தொடரமுடியும்.

யாரும் இதுவரை வழங்காத சலுகை எம்மிடம் மட்டுமே.

HND
in Computing
in Business (General)
in Business Management
in Business HR
in Business IT
(18 Months)

எமது வழமையான கட்டணம் 201,600/=
But Now... 150,000/=
இச் சலுகை 30/09/2011 வரை மட்டுமே......

(சி/4520)

Esoft Computer Studies.
No.166/3, Navalar Road Jaffna.
TP: 021-2224142

வடமாகாணக்கிளைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Jaffna | 021-2224142 | Chavakachcheri | 077-6250789 | Uduppiddy | 021-3201303 |
| Nelliyadi | 021-2244940 | Kodikamam | 077-6250789 | Mannar | 023-2223377 |
| Kilinochchi | 021-2285444 | karainagar | 077-3099308 | Vavuniya | 024-2226060 |


# மட்டு.அரச ஊழியர்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றல்

(கொழும்பு)
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரச அலுவலகங்களில் கடமையாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு நெருப்புக் காய்ச்சல் பரவுவதை தடுப்பதற்காக தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் காத்தான்குடி சுகாதார அலுவலகத்தினால் காத்தான்குடியிலுள்ள அரச காரியாலயங்களில் கடமையாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இந்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நேற்று புதன் கிழமை இடம்பெற்றது. பொது சுகாதார பரிசோதகர்கள் இத்தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (4-2)

# புனர்நிர்மாண பொதுக்கூட்டம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட பூநகரி அலகின் புனர்நிர்மாணப் பொதுக்கூட்டம் கடந்த 19 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத் தலைவரும் முன்னாள் வலய கல்விப் பணிப்பாளருமான த. குருகுலராஜா தலைமையில் நடைபெற்றது.

இதில் இவ்வாண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். இதில் தலைவராக இரா. செல்வராஜா, செயலாளராக இ.குணசேகரம், பொருளாளராக பொன் தில்லைநாதன், உப தலைவராக திருமதி கு.லோஜினி, உப செயலாளராக திருமதி செ. யமுனாவதி ஆகியோர் தெரிவாகினர். அத்துடன் நிர்வாக உறுப்பினர்களாக ம.இராஜகோபாலன், பா. சிலபாலன், உ.குகேந்திரன், ந.சசிகரன், கே. ஜனார்த்தனன், இ.நிஷாந்தினி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (4-12-84)


## ஊவாவெல்லஸ்ஸ பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் சமூகம், யாழ்.கல்வி வலய ஆதரவுடன் நடாத்தும் கல்விக்கருத்தரங்கு 2011

யா/கோண்டாவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம்.
ஆரம்ப நாள் :-23.09.2011
தலைமை :- சி.ரமேஷ் (இறுதிவருட மாணவன்)
பிரதமவிருந்தினர் :கே.விக்னேஷ் (இயக்குநர் IIS)
கௌரவ விருந்தினர் :-சி.தவராஜா (முன்னாள் ஆசிரியர், யாழ்.இந்துக்கல்லூரி)
சிறப்பு விருந்தினர்கள் :-திரு.ராஜலிங்கம் (A.D யாழ் ,கல்விவலயம்)
திரு.ரட்ணசிங்கம் (யாழ்.கல்விவலயம், ஆசிரியர் வளநிலையம்)
திரு.சண்.வாமதேவன் (அதிபர், கோண்டாவில் ஸ்ரீரா மகிருஷ்ண வித்தியாலயம்)

| | | |
|---|---|---|
| 01. | 23.09.2011-விஞ்ஞானம்<br>26.09.2011- கணிதம் | கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலயம். |
| 02. | 26.09.2011-கணிதம்<br>27.09.2011- விஞ்ஞானம் | சென்சாள்ஸ் மகா வித்தியாலயம் |
| 03. | 26.09.2011-விஞ்ஞானம்<br>27.09.2011- கணிதம் | வைத்தீஸ்வராக் கல்லூரி |
| 04. | 26.09.2011-விஞ்ஞானம்<br>27.09.2011- கணிதம் | பெரியபுலம் மகா வித்தியாலயம் |
| 05. | 26.09.2011-கணிதம்<br>27.09.2011- விஞ்ஞானம் | முத்துத்தம்பி வித்தியாலயம் |
| 06. | 28.09.2011-விஞ்ஞானம்<br>29.09.2011- கணிதம் | அச்சுவேலி மத்திய கல்லூரி |
| 07. | 28.09.2011-கணிதம்<br>29.09.2011-விஞ்ஞானம் | புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி |
| 08. | 28.09.2011-கணிதம்<br>29.09.2011-விஞ்ஞானம் | அச்சுவேலி திரேசா மகளிர் கல்லூரி |
| 09. | 28.09.2011-விஞ்ஞானம்<br>29.09.2011- கணிதம் | ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் |
| 10. | 30.09.2011-கணிதம்<br>02.10.2011- விஞ்ஞானம் | அத்தியார் இந்துக்கல்லூரி |
| 11. | 30.09.2011-விஞ்ஞானம்<br>02.10.2011- கணிதம் | உரும்பிராய் இந்துக்கல்லூரி |
| 12. | 30.09.2011-விஞ்ஞானம்<br>02.10.2011- கணிதம் | கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி |

1. IIS 100,மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
2. ராஜா கிறீம்கவுஸ், 36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
3. ஜெகன் மருந்தகம் 462B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
4. கஜமுகன் ஹாட்வெயார் 147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
5. வேணிகளஞ்சியம், 165, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.
6. அசோகா நகைமாடம், 111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
7. சாரங்கா நகைமாடம், 157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
8. கரண் புடவையகம் பலாலி வீதி, திருநெல்வேலி.
9. நாராயணா ஹாட்வெயர், 87, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
10. .எரிக்கனேஸ் பல் மூக்கு கண்ணாடியகம், 564,566 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
11. M.வினோதினி, 227, கச்சேரிவீதி, யாழ்ப்பாணம்.
12. .எடிசன் அக்கடமி,539A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
13. சொக்கர் கடை , கைலாசப்பிள்ளையார் கோயிலடி யாழ்ப்பாணம்.

(இ)

## வவுனியா மாவட்டத்தில்

# அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் எல்லா செயற்பாடுகளிலும் திருப்தி கொள்ளமுடியாது

## அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு

**கடந்த இரண்டு வருடங்களாக வவுனியா மாவட்டத்தில் அரசினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடு அனைத்தும் திருப்திகரமானது என கூற முடியாது என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் பற்றீசியா புட்டினீஸ் தெரிவித்துள்ளார். எனினும் குறித்த செயற்பாடுகளைப் பாராட்டுவதாக அவர் குறிப்பிட்டார்.வவுனியா வடக்கு விவசாயிகளின் விவசாய நடவடிக்கையை மேம்படுத்துவதற்கு பார ஊதியை வழங்கி வைக்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், எனது முதலாவது பயணமாக நான் தூதுவராக பதவியேற்று சிறிது காலத்தில் வவுனியாவிற்கு வந்திருந்தேன். அந்நேரத்தில் பெரும் தொகையான அகதிகள் இங்கே இருந்தார்கள். அவ்வேளையில் சர்வதேசத்தின் ஒத்துழைப்புக்களையும் அரசாங்கத்தின் செயற்பாடுகளையும் பார்த்தேன்.

அப்போது தேவைகள், கஷ்டங்கள் கூடுதலாக இருந்தது. எனினும் வவுனியா அரசாங்க அதிபர் சார்ள்ஸ் திறமையாகவும் அமைதியாகவும் தனது தலைமைத்துவத்தை செயற்படுத்தியிருந்தார். வவுனியா அப்போது முக்கிய இடமாகவிருந்தது. இந்நிலையில் நாமும் அனுசரணையாளர்களாக செயற்பட்டதையிட்டு சந்தோசமடைகின்றேன்.

அரசிற்கு ஆதரவளித்து அகதிகளின் நிலைமையை சீர்செய்ய முயற்சி செய்திருந்தோம். கடந்த இரண்டு வருடங்களில் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை பாராட்டுகின்றேன். எனினும் எல்லாவற்றிலும் திருப்திகரமாகவுள்ளது என கூறமுடியாது.

பாதிப்படைந்த மக்களின் பொருளாதாரத்தை மீள் கட்டியெழுப்புவதற்கு எமது பங்களிப்பை வழங்க முடிவதையிட்டு சந்தோசமடைவதோடு வாழ்வாதார செயற்பாடுகளுக்காகவும் இடம்பெயர்ந்தோருக்காகவும் இளைஞர்களின் பயிற்சிகளுக்காகவும் இலங்கை அரசுக்கு பல்வேறு தரத்திலும் உதவிகளை புரிந்துவருவதானால் இலங்கை அரசின் எல்லா செயற்பாடுகளையும் அங்கீகரிப்பதாக அர்த்தமில்லை.



விவசாயம் என்பது இப்பிரதேசத்தின் முதுகெலும்பு என்பதை நாம் அறிந்ததே. விவசாயத்தில் புதிய தொழில்நுட்பத்தை புகுத்துவதன் ஊடாக வவுனியா மாவட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்றார்.

இந்நிகழ்வில் யூ.எஸ்.எயிட் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி, வடபகுதிக்கான அதன் இணைப்பாளர் உள்ளிட்ட பலர் அமெரிக்க தூதுவருடன் வந்திருந்தனர். இவர்களுக்கு செங்கம்பள வரவேற்பளிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-2)

## விண்ணப்பப்படிவத்தை ஒப்படைக்க கோரிக்கை

(அச்சுவேலி)

தொழில் தேடுவோருக்கான விண்ணப்பப்படிவங்கள் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு கிராம அலுவலகரிடமும் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் கிராம அலுவலகரிடம் ஒப்படைக்குமாறு கோப்பாய் பிரதேச செயளாலர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (4-12-70)

## அபிவிருத்திக்குழு தெரிவு

(புன்னாலைக்கட்டுவன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மானிப்பாய்த் தொகுதியின் கீழ் உள்ள புன்னாலைக்கட்டுவன்,ஈவினை ஆகிய கிராமங்களுக்கான அபிவிருத்திக்குழு அண்மையில் தெரிவு செய்யப்பட்டது.

இதற்கமைய மானிப்பாய் தொகுதியின் தலைவராக ச.கௌரிகாந்தன்; செயலாளர் கஜதீபன்ஆகியோர் தெரிவாகினர்.இவ் இருவரும் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிபதிராசா, சிறிதரன், சரவணபவன் ஆகியோர் முன்னிலையில் இக்குழு தெரிவு செய்யப்பட்டது.

இதன் போது அபிவிருத்திக் குழுத்தலைவராக து.லோகேஸ்வரன், செயலாளராக ச.அரசரட்ணம், பொருளாளராக ச.செல்வரட்ணம் ஆகியோரும் 5 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (4-12-78)

# இலங்கை அகதி ஒருவரை கடத்தும் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்தது

(கொழும்பு)

இந்தியாவில் 20 வருடங்களாக வாழ்ந்து வருகின்ற இலங்கை அகதி ஒருவரை நாடு கடத்துமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை புதுடில்லி நகர நீதிபதி நிராகரித்துள்ளார்.

துன்புறுத்தலுக்கு இலக்காகக் கூடிய நபராக இவர் மாறுவதற்கு இடமளிக்க முடியாதென நீதிபதி தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தின் திருவள்ளூர் அகதி முகாமில் தங்கியிருந்த சந்திரகுமார் என்பவர் போலி ஆவணங்களுடன் இத்தாலி நாட்டுக்கு தப்பிச் செல்ல முற்பட்டபோது இந்திய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதன்பின்னர்சிலகுற்றச்சாட்டுக்களின்அடிப்படையில் இந்த நபருக்கு எதிராக நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்திய அரசியல் அமைப்பின் 21 ஆம் சரத்தின் பிரகாரம் பிரஜைகள் அல்லாதவரும் இந்தியப் பிரஜைகளைப் போன்றே சமமாக மதிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதாக புதுடில்லி நகர நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஆறு மாதங்களாக இது தொடர்பான வழக்கு விசாரணை இடம்பெற்று வருகின்ற நிலையில் இலங்கை அகதி போதுமான தண்டனையை அனுபவித்துள்ளதாக நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

இந்தநபர் தங்கியிருந்த அகதி முகாமுக்கே அவரை மீண்டும் அனுப்பி வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (4-2)


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## 27 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம்

## 2011 ஒக்டோபர் 06

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொதுப்பட்டமளிப்பு வைபவம் எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதி நடைபெறும்.

இப்பட்டமளிப்பு வைபவத்தில் நேரடியாகப் பட்டம் பெறுவோருக்கு கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும். பட்டமளிப்பு வைபவத்தில் பங்குபற்றுவதற்காக பணம் செலுத்திய பற்றுச் சீட்டினையும் பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டையினையும் காண்பித்து புகைப்படத்திற்காக ரூபா 50.00 இனையும் செலுத்தி கல்விக்கிளையில் பின்வரும் திகதிகளில் அங்கிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

| திகதி | நேரம் | பட்டம் |
|---|---|---|
| 2011.09.30 | மு.ப 9.00-12.00 | M.A.(Reg.Planning), M.A.(Saiva Siddhanta) M.A.(Pop.Dev.Studies), B.A.(Special) |
| | பி.ப 2.00- 4.00 | M.A.(Cultural Studies), M.A. (Tamil) B.Sc.(Agriculture), B.S.M.S |
| 2011.10.01 | மு.ப 9.00-12.00 | M.Phil., M.A.(Pub.Admin), M.A. (Dev.Studies), B.F.A. |
| | பி.ப 2.00- 4.00 | B.A.(General),M.B.B.S., B.Sc. (M.L.S) B.Phara., B.Sc. (Nursing) |
| 2011.10.02 | மு.ப 9.00-12.00 | P.G.D.E (Jaffna), BBA, B.Com. |

குறிப்பு:-

வவுனியா வளாக மாணவர்கள் தங்களுக்குரிய பட்டமளிப்பு அங்கிகளை வவுனியா வளாகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

பதிவாளர்.

(சி-4519)


# நீதிமன்றத்தால் அபராதம்

(கிளிநொச்சி)

அனுமதிப்பத்திரம் இன்றி அரசசாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 10 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(கிளிநொச்சி)

காலாவதியான சோடாவை விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சி மாவட்ட சுகாதார திணைக்களதால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(கிளிநொச்சி)

மதுபோதையில் முச்சக்கரவண்டி செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(கிளிநொச்சி)

அனுமதிப்பத்திரம் இன்றி அரசசாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் முழங்காவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் 10 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(யாழ்ப்பாணம்)

குறித்த விலைக்கு அதிகமாக குளிர்பானம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் 3 நபர்கள் யாழ்ப்பாண பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் 3 நபர்களுக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(யாழ்ப்பாணம்)

விலைப்பட்டியலை விளம்பரமாக வெளிக்காட்டி வைக்காத குற்றச்சாட்டின் பேரில்5 நபர்கள் யாழ்ப்பாண பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் ஐந்து நபர்களுக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3)

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும்போது அதில் முஸ்லிம்களுக்கும் அரசியல் உரிமை இருக்கும்



## மாவை. சேனாதிராஜா தெரிவிப்பு

(கொழும்பு)

**தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒன்றுபட்டு போராடுவதன்மூலமே ஒரு நியாயமான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். முஸ்லிம் மக்களுக்கு தனித்துவமான சுயஉரிமை உண்டு என்பதையும் நாம் கூறிக் கொள்ள விரும்புகிறோம் என கல்முனை மாநகரசபைக்கு போட்டியிடும் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து கல்முனை கடற்கரை வீதியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த மண் எனக்கு புதியதல்ல. நாம் இம்மக்களுக்காக இரத்தம் சிந்தியவர்கள். இன்று கல்முனைத் தேர்தலை நாம் ஒரு வித்தியாசமான தேர்தலாகக் காண்கிறோம். வேறு ஒரு பிரதேசத்தில் இல்லாத ஒரு விடயம் இங்கு உள்ளது.

இது தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் செறிந்து வாழும் ஒரு பிரதேசம். இங்கு தமிழ் மக்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாக இருந்தாலும் கொள்கையில் குறைந்தவர்கள் அல்ல.

தந்தை செல்வாவின் காலத்திலிருந்து இப் பிரதேசத் தமிழ்மக்கள் கொள்கைக்காக வாக்களித்தவர்கள். எமது பிரதிநிதித்துவத் தின்மூலம் மாநகர முதல்வரை நாம் தீர்மானிக்கும் ஒரு தேர்தலாக இது அமையப் போகின்றது என நினைக்கிறேன்.

தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு வாழ வேண்டியவர்கள். முஸ்லிம், தமிழ் மக்களும் ஒன்றுபட்டு ஆட்சி செய்பவர்களாக இருப்பார்களேயானால் நாம் எமது மண்ணை நாமே ஆளக்கூடிய ஒரு இனமாக வாழ முடியம்.

தனித்துவமான முஸ்லிம் மக்களுக்கு சுய உரிமை உண்டு என்பதை அங்கீகரிக்கின்ற ஒரு கட்சி எமது கட்சி. எமது பாசறையில் உருவாகிய எத்தனையோ தலைவர்கள் இன்றைய முஸ்லிம் தலைவர்களாகத் திகழ்கின்றனர்.

அக் காலத்தில் முஸ்லிம் மக்களும் எமக்கு வாக்களித்தனர். அன்று முஸ்லிம் ஐக்கிய முன்னணிக் கட்சி அமிர்தலிங்கத்துடன் ஒன்று பட்டுச் செயற்பட்டது. தமிழர்களின் சுதந்திர ஆட்சியை ஏற்றுக்கொண்டு முஸ்லிம் மக்கள் எமது கட்சிக்கு வாக்களித்ததை நாம் நினைவு படுத்த விரும்புகின்றோம்.

இந்நாட்டில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்போது அதில் முஸ்லிம் மக்களுக்கும் அரசியல் உரிமை இருக்கும் என்பதை நாம் கூறிக்கொள்ள விரும்புகிறோம். தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு போராடுவதன் மூலமே ஒரு அரசியல் தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும். முஸ்லிம் மக்களின் ஆதரவு எமக்குத் தேவை. எமது பேச்சு வார்த்தைக்கு ஆதரவு வழங்கி தீர்வுகாண முன்வரவேண்டும்.

வட,கிழக்கு தாயகத்தில் தங்கள் மண்ணை தாங்களே ஆளுகின்ற ஒரு தன்னாட்சியைத் தான் நாம் கோருகின்றோம். எனவே தான் கல்முனை மாநகரசபைத் தேர்தல் முக்கியமான தேர்தல் எனக்கூறுகிறேன்.

தமிழ்,முஸ்லிம் இரண்டு கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஆட்சியமைக்கும் பட்சத்தில் நாம் எமது இருப்பையும் உறுதிப்படுத்திக்கொண்டு நாம் எதிர்பார்க்கின்ற அபிவிருத்தியையும் முன்னெடுக்க முடியும்.

நாம் அறுபது ஆண்டுகளாக எமது பிரதேசத்தில் தொடர்ச்சியாக வெற்றிபெற்று வருகின்றோம். அதனை நாம் நிரூபித்துள்ளோம். எமது மக்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்து பிளவுபடாமல் மாற்றார்களுக்கு இடமளிக்காமல் இத் தேர்தலில் ஒன்றுபட்டு வாக்களிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-2)

# கனேடிய வெளிவிவகார அமைச்சு த.தே.கூட்டமைப்பை அழைக்கிறது

(கொழும்பு)

கனேடிய வெளிவிவகார அமைச்சின் தென்னாசிய பிரிவு தமிழ்த் தேசியக்கூட்மைப்பை உத்தியோகபூர்வமாக கனடாவிற்கு அழைத்து கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக கனேடிய தமிழர்களது பிரதிநிதிகள் சிலரிடமிருந்து தெரிவிக்கப்படுகிறது.

ஆளும்கட்சியான கொன்சவேட்டிவ் கட்சியின் தமிழ் பிரதிநிதிகள் மற்றும் ஆதரவாளர்கள் இலங்கை விவகாரம் தொடர்பாக கனடாவின் தெளிவான நிலைப்பாட்டைத் தெரிவிக்குமாறு விடுத்த வேண்டுகோள்கள் சாதகமாகப் பரிசீலிக்கப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.


அநேகமாக கனேடிய பிரதமர் அலுவலகம் அல்லது வெளிவிவகார அமைச்சு இலங்கை விவகாரம் தொடர்பான கனேடிய அரசின் நிலைப்பாட்டைத் தெரிவிக்கும் அறிக்கையொன்றை அடுத்தடுத்த வாரங்களில் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் கனேடிய வெளிவிவகார அமைச்சின் தென்னாசிய பிரிவு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை கனடாவிற்கு உத்தியோகபூர்வமாக அழைக்கும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ள இவ்வேளையில் அவர்கள் கனடாவிற்கு வருவதற்கு முன்பாகவே இவ்வறிவிப்பு விடுக்கப்படுமெனவும் தெரியவருகிறது.

கனேடிய அரசின் இத் திடீர் நிலைப்பாட்டால் இலங்கை அரசுக்கு இராஜதந்திர ரீதியாக பெரும் பின்னடைவு ஏற்பட வாய்ப்பு உள்ளதாகக் கருதப்படுகிறது. (4-2)

# யுத்தமற்ற சூழ்நிலையை சாதகமாக கருத முடியாது

## பிரித்.உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்தமற்றசூழ்நிலைமையை சமாதானமாகக் கருத முடியாது என பிரித்தானியாவிற்கான உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீன் தெரிவித்துள்ளார்.

சமாதானத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஆற்றிய விசேட உரையின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சமாதானம் மற்றும் அதனை அடைவதற்கான சவால்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

யுத்தமற்ற ஓர் நிலைமையை சமாதானமாகக் கருத முடியாது எனவும் சமாதானம் என்பது நபர்களுக்கு இடையில் மாறுபட்ட அர்த்தத்தை பிரதிபலிக்கும் என அவர் தெரிவித்துள்ளார். (4-2)

# மட்டு.மாவட்டத்திற்கு 9 எம்.பிக்களால் 31.27 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து இவ் ஆண்டுக்காக 31.27 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன் செல்வராசா, பி.அரியநேத்திரன் மற்றும் சி.யோகேஸ்வரன் ஆகிய மூவரும் தலா ஐந்து மில்லியன் ரூபாய்களையும் பிரதியமைச்சர்களான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, பசீர் சேகுதாவூத் மற்றும் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோர் தலா ஐந்து மில்லியன் ரூபாவினையும் ஒதுக்கீடு செய்துள்ளனர்.

இதேவேளை, தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுர குமார திஸ்ஸநாயக்க 8 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவினையும் டி.எம்.சுவாமிநாதன் 3 இலட்சம் ரூபாவினையும் ஏ.எச்.எம்.அஸ்வர் 50 ஆயிரம் ரூபாவினையும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நிதியொதுக்கீடு செய்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப் படவுள்ள 412 திட்டங்களுக்காக இந் நிதியொதுக்கீடு செய்யப்படவுள்ளதாக மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார். (4-2)


அன்பொளி கல்வியகம்

**பாராட்டி வாழ்த்துகின்றோம்!**

2011 தரம் 5 இல் எமது கல்வியகத்தில் கல்வி கற்ற மாணவர்களில் அகில இலங்கை ரீதியில் புலமைப்பரிசில் பரீட்சையில் முதன்மை பெற்ற மாணவர்களையும் அவர்களோடு சித்தியெய்திய 500க்கும் மேற்பட்ட ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



ப. சேதுராகவன் -194
முல்லை.மா.நிலை -1
தேசிய நிலை - 2



ர.நிதூஷிகா -192
யாழ். மா.நிலை-1
தேசிய நிலை - 10



லோ.டிலோஷன் -191
யாழ்.மா.நிலை - 2
தேசிய நிலை - 20



கு. கஜானி - 190
யாழ். மா.நிலை -4



இ. மாதங்கி - 188
யாழ். மா.நிலை -9

**ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்**

**2012 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்களும்,**
**2012 தரம் - 4 மாணவர்களுக்குரிய வகுப்புக்களும் (தற்போது தரம்- 3)**
**ஆரம்பமாகின்றன**

யாழ்ப்பாணத்தில்
**அன்பொளி கல்வியகம்**
**யாழ். இந்துக்கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

சாவகச்சேரியில்
**அன்பொளி கல்வி நிலையம்**
**தபாற்கந்தோர் வீதி,**
**சாவகச்சேரி.**


அனுமதிகளை 24.09.2011 சனிக்கிழமையிலிருந்து 30.09.2011 வெள்ளிக்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிக்குள் முற்கூட்டியே விண்ணப்பங்களைப் பெற்று பதிவு செய்துகொள்ளவும்.

குறிப்பு :- பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

*சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை*
*அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.*

**இயக்குநர்கள்**

# தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம்
# த.தே.கூ.கருத்துக்கு அரசாங்கம் கண்டனம்



(கொழும்பு)

**அரசின் திட்டமிட்ட இன ஒழிப்பு, நில அபகரிப்பு பற்றி சர்வதேச சமூகத்திடம் முறையிடுவோம். தேவைப்படின் நீதிமன்றமும் செல்வோம் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்த கருத்துக்கள் ஆதாரமற்றவை என்று அரசாங்கம் மறுத்துள்ளது.**

சர்வதேச ரீதியில் இலங்கைக்கு அவப்பெயரை ஏற்படுத்தி அநாவசியமான அழுத்தங்களை கொண்டு வந்து நாட்டில் நல்லாட்சி நடைபெறவில்லை என்ற பொய்யான தகவல்களை வெளிநாடுகளுக்கு எடுத்துக் காட்டுவதற்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் எடுத்து வரும் முயற்சிகள் தேசத்திற்கு ஏற்படுத்தும் பாதகமான செயல்கள் என்றும் அரசாங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

எங்கள் நாட்டில் இரண்டு இனங்களே இருக்கின்றன. ஒன்று நாட்டை நேசிப்பவர்கள், மற்றவர்கள் நாட்டிற்கு துரோகம் இழைப்பவர்கள் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் முன்னர் ஒரு தடவை தெரிவித்த யதார்த்த பூர்வமான கருத்துக்கு போலி அர்த்தத்தைக் கொடுத்து தமிழ்த் தேசிய கூட்டணியைச் சேர்ந்த சிலர் இவ்விதம் தவறான தகவல்களை எடுத்துரைப்பது மன்னிக்க முடியாத குற்றமென்று அரசாங்க வட்டாரங்கள் கூறுகின்றன.

தமிழினம் என்றொன்று இலங்கைத்தீவில் இருக்கக் கூடாது என்று இலங்கை அரசாங்கம் சிங்களக் குடியேற்றங்களை தமிழர் தாயகங்களில் அரங்கேற்றி வருகிறதென்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டியிருக்கிறார்.

முல்லைத்தீவு, கொக்கிளாய் பகுதியில் புதிதாக சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்படுகின்றன. இந்தக் குடும்பங்களுக்கு புதிதாக காணிகளும் வழங்கப்படுகின்றன. இலங்கையில் எங்கும் எவரும் வாழலாம் என்று அரசாங்கம் பகிரங்கமாக அறிவித்து இந்த இன ஒழிப்பு நடவடிக்கைகளையும் தமிழர் காணிகளையும் அபகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறதென்றும் அவர் குற்றம் சாட்டியிருக்கின்றார்.

அரசாங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில்,

இல்லாத பிரச்சினைகளை போலியாக ஜோடித்து சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்விதம் பிரசாரங்களை செய்து வருவதை அரசாங்கம் கண்டிக்கிறதென்றும் இந்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களுக்கு அரசாங்கம் உரிய காலத்தில் சரியான பதிலை கொடுக்குமென்று கூறினார். (4-2)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் செயலாண்மைக் குழு உறுப்பினர் தெரிவும் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் தமிழ்ச் சங்கத் தலைவர் வே. இறைபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் த. குருகுலராஜா, கரைச்சி பிரதேச செயலர் போ. நாகேஸ்வரன், வன்னி கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட் தந்தை அருளானந்தன் யாவீசு அடிகளார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-12-84)

# கிளின்டன் சர்வதேச மாநாட்டில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறும் 7ஆவது கிளின்டன் சர்வதேச முனைப்புக்கள் மாநாட்டில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவும் கலந்து கொண்டுள்ளார்.

இம்முறை மாநாட்டில் தற்போது உலகம் எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடி, பொருளாதார விடயங்கள், கல்வி, சுற்றாடல், மின் சக்தி, உலக சுகாதாரம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடப் படவுள்ளன.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி இந்த மாநாட்டில் கடந்த 2006 ஆம் ஆண்டுமுதல் கலந்து கொண்டு வருவதுடன் அந்த மாநாட்டின் வறுமை ஒழிப்பு குழுவின் ஆலோசனை குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (4-2)

# இரட்டைக் கோபுர தாக்குதலின் பின்பே பயங்கரவாதத்தின் ஆபத்து உணரப்பட்டது

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதிகள் நிதி திரட்டுவதன் ஆபத்தை இரட்டை கோபுரம் மீதான தாக்குதல்களை அடுத்தே வல்லரசுகள் உணர்ந்து கொண்டன என்பதுடன் பல்வேறு நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான திருத்தம் சட்ட மூலத்தின் ஊடாக பயங்கரவாதிகளுக்கு பணம் செல்வதை தடுக்கலாம் என்று நீதியமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற நிதி தொழில் சட்டமூலம், பணம் தூய்தாக்கல் தடை (திருத்தம்) பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான திருத்தம், சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் தொடாந்து உரையாற்றுகையில்,

பாராளுமன்ற பொதுசபைக் குழுவின் மூலம் பெறுமதி சேர்வரி மோசடிகள் இடம் பெற்றுள்ளமையைக் கண்டுபிடித்தோம். குற்றவாளிகளுக்கு தண்டனை மீதான சட்டத்தின் கீழே தண்டனை வழங்க முடிந்தது என்பதுடன் பணத்தை மீளப்பெற்று உரியவர்களிடம் ஒப்படைப்பதற்கு பெரும் சிரமம் ஏற்பட்டது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சட்டங்களுடன் பரிந்துரைகளை மேற்கொண்டு குற்றவியல் பரஸ் பர உதவிச் சட்டமூலத்தை அமைச்சு விரைவில் தயாரிக்கவிருக்கின்றது. இதன் மூலமாக பயங் கரவாதிகளுக்கு நிதி புழங்குவதும் அதன் வழிமுறைகளையும் தடுக்க முடியும். குற்றவியல் பரஸ்பர உதவி சட்ட மூலத்தை பொதுநலவாய நாடுகளுடன் கைகோர்த்து செயற்பட முடியும் என்பதுடன் ஏனைய நாடுகளுக்கு சட்ட உதவிகளை வழங்கவும் முடியும் என்றார். (4-2)

# மஞ்சள் கடவையில் கடக்காத 1273 பேர் இனங்காணப்பட்டனர்

(கொழும்பு)

வீதிகளில் மஞ்சள் கடவை கோடுகள் ஊடாக உரியவாறு கடந்து செல்லாத ஆயிரத்து 273 பேர் இந்த மாதத்தின் இதுவரையான காலப் பகுதிக்குள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறானவர்களில் சிலர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக கொழும்பு போக்குவரத்துப் பிரிவின் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி சூலாடி சில்வா குறிப்பிடுகிறார். கடந்த ஓகஸ்ட் மாதத்திற்குள் மாத்திரம் 858 பேர் அடையாளம் காணப்பட்டதாக அவர் கூறினார்.

எதிர்காலத்தில் உரியவாறு வீதி மஞ்சள் கடவைகள் ஊடாக கடந்து செல்லாதவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர நடவடிக்கை எடுப்பதாக கொழும்பு போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் தெரிவிக்கின்றனர். (4-2)

# ரிசானா நபீக் விவகாரம் நபருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

இலங்கைப் பணிப்பெண் ரிசானா நபீக்கை சவுதி அரேபியாவுக்கு அனுப்புவதற்காக போலியான கடவுச்சீட்டையும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தையும் தயார் செய்த விவகாரத்தில் பிரதான சந்தேகநபரை செப்டெம்பர் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

பேருவளையைச் சேர்ந்த தம்பி லெப்பே அப்துல் சலாம் எனும் இச்சந்தேக நபரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பொலிஸார் தமக்கு கிடைத்த தகவலொன்றையடுத்து கடந்த திங்கட்கிழமை கைது செய்தனர்.

இவ்வழக்கு தொடர்பாக மேலும் இரு சந்தேக நபர்கள் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# மாங்குளம் புதிய கொலனி பகுதியில் மர்மமனிதனின் நடமாட்டத்தால் பீதி

வீடமைப்பு அதிகாரசபை அலுவலகத்திற்கு முன்னாள் மாங்குளம் புதிய கொலனி மக்கள் குடியிருப்பிலுள்ள வீடொன்றில் மர்மமனிதன் புகுந்ததால் அப்பகுதி மக்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 19 ஆம் திகதி இரவு 9.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, இப்பகுதியிலுள்ள வீடொன்றில் அங்கு உள்ளவர்கள் வீட்டின் முன்புறம் இருந்தவேளை பின் பகுதியில் தொலைபேசி ஒலியெழுப்பும் சத்தம் கேட்டது.

இதனையடுத்து வீட்டின் பின்புறம் சென்று பார்த்த போது ஒரு மர்மமனிதன் ஓடுவதை கண்டுள்ளனர். இதன்போது அவ்வீட்டிலுள்ளவர்கள் கூக்குரலெழுப்பியதையடுத்து அயலவர்கள் ஒன்றுதிரண்டு துரத்திய வேளை தப்பித்து ஓடியுள்ளான்.

இதன் பின்னர் வீட்டின் பின்புறம் அவர் நின்ற இடத்தில் சென்று பார்த்தபோது ஒரு கைத்தொலைபேசியும், கறுப்பு நிற நீளக் காற்சட்டையும் அதனுள் 200 ரூபா பணமும் காணப்பட்டது.

இச்சம்பவத்தை கேள்வியுற்று சம்பவ இடத்திற்கு வந்த இராணுவ அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அதனையடுத்து அப்பகுதி மக்கள் தாம் கண்டெடுத்த பொருட்களை இராணுவ அதிகாரிகளுக்கு காட்டிய பொழுது தொலைபேசி பலமுறை ஒரு நபரின் பெயரையே அழைத்த வண்ணம் இருந்தது.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதிமக்கள் இரவு முழுவதும் பீதியினால் விழிப்பாக இருந்துள்ளதாக தெரிவித்துள்ளனர். (4-12-15)

# ஆசனப் பட்டிகளை அணியாதோருக்கு எதிராக ஒக்டோபர் முதல் அபராதம்

## பொலிஸார் நடவடிக்கை

(கொழும்பு)

வாகனங்களின் முன்புற ஆசனங்களிலிருந்து பயணம் செய்பவர்கள் ஆசனப்பட்டிகளை அணிவது ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து கட்டாயமாக்கப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர். இவ்விதியை மீறுவோருக்கு எதிராக கடும் அபராதங்கள் விதிக்கப்படவுள்ளன.

முதல் தடவையாக குற்றமிழைப்போருக்கு ஆயிரம் முதல் இரண்டாயிரம் ரூபா வரையிலான அபராதமும் இரண்டாவது தடவை குற்றமிழைப்போருக்கு இரண்டு ஆயிரம் ரூபா முதல் 3 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்படும். 3 ஆவது தடவை குற்றமிழைப்போருக்கு 3 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்படுவதுடன் அவர்களின் சாரதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும்.

1.5 மீற்றருக்கும் குறைந்த உயரமுடையவர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களால் ஆசனப்பட்டி அணியக் கூடாதென சிபாரிசு செய்யப்பட்டவர்களுக்கு இதிலிருந்து விலக்களிக்கப்படும்.

வீதி விபத்துக்களில் பலர் இறந்தமைக்கு அவர்கள் ஆசனப்பட்டிகளை அணியாதமை காரணமாக இருந்துள்ளதாகவும் புதிய விதிகளை சாரதிகள் பின்பற்றுவதை கண்காணிப்பதற்காக கூடுதலான ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள பொலிஸார் திட்டமிட்டுள்ளனர். (4)

# மற்றொரு கோணம்


## உலகின் 70 சத வீதமான வளங்களை தம்வசமாக்கிக்கொண்டுள்ள, முழு மக்கட்தொகையினரின் 1 சதவீதத்தினரான அந்த மக்கள் தமது மனதைத் தயார்ப்படுத்திக்கொண்டால் வெகுவிரைவில் உலகின் வறுமைநிலையை முடிவுக்குக்கொண்டுவந்துவிடலாம்



ஆன்மீகம் 49

...எனவே அந்த 1% மக்கள் தங்கள் மனதைத் தயார் செய்து கொண்டால், வெகுசில நாட்கள் அவகாசத்திலேயே வறுமை நிலை முடிவுக்கு வந்துவிடும். ஆனாலும், மனித குலம் மேலும் உயிரோட்டத்துடன் நிகழ வேண்டியுள்ளது.

லாவோட்சு எல்லா பயங்கரமான விடயங்களிலும் குற்றம் சாட்டப்பட்ட ஒரு மோசமான



கட்டத்தில் இருந்தார். ஆனால் அதன் பிறகு, அவர் சமூகத்தில் ஒரு கட்டத்தில் இருந்தார். ஆனால், அதன் பிறகு அவர் சமூகத்தில் ஒரு அறிவாளி என்ற நிலையைத் திரும்பப் பெற்றார்.

அவர்பால் அதீத ஆர்வம் கொண்ட மன்னர், நீங்கள் தான் என் நாட்டின் மிகச்சிறந்த அறிவாளி. அதனால் நீங்கள் இந்த நாட்டின் தலைமை நீதிபதியாக இருக்க வேண்டும் என்று வேண்டினார். அவரிடம் முதன் முதலாக வந்த ஒரே திருட்டுக் குற்றம் தான் ஒரு பணக்கார மனிதனின் வீட்டில் மிகவும் சொற்பமான கூலிக்குப் பணியாளாக, குழந்தைப்பருவம் முதல் வேலை பார்த்து வந்த ஒருவன் இருந்தான். அவன் 30 ஆண்டுகளுக்கு முன்பு கொத்தடிமையாக வாங்கப்பட்டிருந்தவன். அவனுக்கு உணவைத் தவிர வேறு எதுவுமே தரப்பட்டிருக்கவில்லை. ஒரு நாள், அந்தப் பணக்காரன் வீட்டிலிருந்த நகைகளையெல்லாம் திருடிக்கொண்ட அந்த வேலையாள் தப்பியோடிவிட்டான். அந்தப்பணக்கார மனிதர் அந்த வேலையாளைப் பிடித்து, லாவோட்சுவின் நீதிமன்றத்தில் புகார் கொடுத்து நீதி கேட்டார். இருதரப்பு நியாயங்களையும் கேட்டு விட்டு, லாவோட்சு அவருடைய தீர்ப்பினை அளித்தார்.

அவர் கூறியதாவது, இந்த மனிதன், தான் திருடியதில் பாதி பங்கு நகைகளை அவனிடமே வைத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும். மறுபாதி, அரசனின் கஜானாவிற்குச் செல்லவேண்டும். மேலும் அந்தப்பணக்கார மனிதர் 10 வருடங்களுக்குச் சிறையில் வைக்கப்பட வேண்டும். என்றார். முழுநீதிமன்றமும் திகைத்தது.

அரசர் திகைத்துப்போய் லாவோட்சுவை அழைத்து என்ன இப்படிச் செய்து விட்டீர்கள். நீங்கள் அறிவாளி என்று நினைத்தனே! என்றார். அதற்கு லாவோட்சு ஆமாம் அந்த வீட்டிலேயே வளர்க்கப்பட்ட அந்தச் சிறுவன் மகனைப் போன்றவன் என்பதுதான் விடயம்.


**என் மனதில் உள்ள குழப்பங்களை எப்படிக்கட்டுப்படுத்துவது?**


ஒருவருக்கு இனிமையாக இருக்கக் கூடிய மனம் இன்னொருவருக்கு தாங்க முடியாத வேதனையாக இருக்கிறது. இந்த மனக்குழப்பத்தைச் சமாளிப்பதற்காக மனிதர்கள் விதம் விதமான மாற்று வழிகளையும் மன வக்கிரங்களையும் கண்டுபிடித்துள்ளனர். இந்த வக்கிரங்கள் அவர்களுக்குத்தற்காலிக விடுதலையையே அளிக்கின்றன. ஆனால், சில காலங்களுக்குப்பின்னர் மனக் குழப்பங்கள் அதிகமாகிவிடுகின்றன. மாற்று வழிகள் நிரந்தரத்தீர்வை அளிக்காது. அறிவானது ஒரு மருத்துவரின் கூர்மையான கத்தியைப்போல் எல்லாவற்றையும் பகுதிகளாகப்பிரிக்கும் தன்மையுடையது. அறிவினால் தான் நீங்கள் ஒன்றிலிருந்து வேறொன்றை வேறுபடுத்திப் பார்க்கும் திறமையைப் பெற்றுள்ளீர்கள். கத்தி ஏதோ ஒன்றை வெட்டுமென்றால் வெட்டப்படும் பொருள் கத்தியில் ஒட்டாமல் இருக்க வேண்டும்...

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# கணினி யுனிக்கோட் (Unicode) தமிழ்மொழியில் ஏற்படுத்திய தாக்கங்கள்





உரு-4

03

3.6 ஃப்(F) விற்கான இடம்

கணிசமான அளவு தமிழர்களினால் 'ஃப்' ஆனது 'F' இற்குரிய தமிழ் வரிவடிவமாக பாவிக்கப்பட்டு வருகிறது.

கணக்கதிகாரம் - 1958

(3/20+3/80)×1/8=(1/80+1/160+1/320)+(1/320×1/2)

15/80×1/80 =7/320+1/640)

15/640 =14/640+1/640

15/640 =15/640

உரு-4

1) 1943 இல் யோகி சுத்தானந்த பாரதியார் இயற்றிய "இனிய தமிழ் இலக்கணம்" எனும் நூலில் 50 ஆம் பக்கத்தில், 'ஃப்'-ஐ,'F' இற்கு பாவிக்கலாம் என்பதை வலியுறுத்தி உள்ளார்.

2) 1960 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் "ஃப்ராங்" என்ற பெயர் "எழுத்து" எனும் சஞ்சிகையின் முன்னட்டையில் பாவிக்கப்பட்டுள்ளது.

3) 1968 ஆம் ஆண்டு "உலகத் தமிழ் மாநாட்டு விழா மலரிலே" தமிழ் சொற் சிறப்பு எனும் சி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் கட்டுரையில் "ஃப்ளவர்" (flower) என எழுதப்பட்டுள்ளது.

4) 1981 ஆம் ஆண்டு "ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டு விழா மலரிலே" அறிவியல் தமிழ் எனும் டாக்டர் ஜி.ஆர். தாமோதரனின் கட்டுரையில் "திரு. பா.வே.

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

மாணிக்கநாயக்கரின் கருத்துக்கிணங்க, தமிழில் இல்லாத 'F' ஒலிபகரத்துடன் ஆய்தம் சேர்த்து எழுதப்பட்டுள்ளது." என்று கூறி "ஃபிளின்ட்" (Filint) என்று எழுதியுள்ளார். (பக்கம் 231)

5) 2004 ஆம் ஆண்டு இந்திய மொழிகளில் நடுவன் நிறுவனம், மைசூர் மொழி அறக்கட்டளை, சென்னைத் தமிழ் பல்கலைக்கழகம் ஆதரவில் வெளிவந்த "தமிழ் நடைக் கையேடு" நூல்,'f','ph' ஒலிகளுக்கு 'ஃப்'ஐ பயன்படுத்தி வழிகாட்டியுள்ளது. (ஃபைனான்ஸ்-finance, ஃபிலடெல்ஃபியா- Philadelphia)

மேற்படி உதாரணங்களைப் பார்க்குமிடத்து குறிப்பிட்ட காலமாக (குறைந்தது 65 ஆண்டுகளுக்கு மேலாக) நிலையாக அங்கீகாரம் பெற்ற பல இடங்களில் 'ஃப்' வைப் பாவித்து வருவது தெளிவடையும் இதனையடுத்து 'ஃப்' ஆனது அகர வரிசையில் க்ஷ இற்கு அடுத்ததாக வைக்கலாம் என இலங்கை ICTA இனால் பரிந்துரைக்கப்பட்டது.

3.7 தமிழ் எழுத்துருக்கள் (fonts)

தமிழ் மெய்கள் 'இ' உயிருடனும் 'ஈ' உயிருடனும் சாரும்போது உருவாகும் உயிர்மெய் எழுத்துக்களுக்கு விசிறி இடப்படுகின்றன. கடந்த நூறாண்டுகளுக்கு மேலாக இவ் விசிறி வடிவங்கள் இலங்கை, இந்தியா அச்சுப்பதிப்பில் வழுவாமல் இருந்து வந்துள்ளன. (உரு-6) இன்றும் தினகரன், தினக்குரல், வீரகேசரி போன்ற இலங்கை நாளிதழ்கள் தம் எழுத்துக்களில் (தலையங்கங்கள் தவிர்ந்து) இதனைக் கடைப்பிடித்து வருவது ஆரோக்கியமான விடயம். ஆனால், 90% இற்கும் மேற்பட்ட, கணினியினூடாக பிரசுரமாகும் நூல்கள் இதனைத் தவறவிட்டது கவலைக்குரிய விடயம். அச்சிலிருந்து கணினிமயத்திற்குத் தாவும் அவசரத்தில் கடந்த பத்து ஆண்டுகளில் அநேக எழுத்துரு (fonts) உருவாக்கத்தில் இவ்விசிறிகள் தவறவிடப்பட்டன. தற்பொழுது நியமமாகாத, நியமமாக ஒரே விசிறி எல்லா எழுத்துக்கும் பயன்படுத்தப்படுகின்றது. ('ட' தவிர்த்து) தற்பொழுது யுனிக்கோட்டின் வாயிலாக கணினியின் விசிறியிற்கு ஒரே விசை (key) பயன்படுத்தப்படினும் எழுத்துக்கேற்ப தேவையான விசிறி வடிவம் பெற்றுக் கொள்ளக்கூடிய தொழில் நுட்பம் உள்ளது.

(தொடரும்)

கணினி விரிவுரையாளர்
ஞா.பாலச்சந்திரன்

## இனிப்புக்களை கொடுத்து
# சிறுமியை துஷ்பிரயோகம் செய்த முதியவர் கைதானார்

(கொழும்பு)


இனிப்புப் பண்டங்களைக் வாங்கிக் கொடுத்து 10 வயது சிறுமியொருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் மாலை களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி களுவாஞ்சிக்குடி தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

களுவாஞ்சிக்குடி மகிழூர் கிராமத்தைச் சேர்ந்த 10 வயது சிறுமியொருவர் அவரது வீட்டு முன்றலில் நின்றிருந்த போது அவ்வழியாக வந்துள்ள முச்சக்கரவண்டிச் சாரதியொருவர் சொக்லெட் போன்ற இனிப்புப் பண்டங்களைக் கொடுத்து சிறுமியை முச்சக்கர வண்டியில் ஏற்றிச் சென்றுள்ளார்.

இந்நிலையில் அழைத்துச் செல்லப்பட்ட சிறுமியை அச் சந்தேக நபர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார். இதன்போது சிறுமியின் அழுகுரல் கேட்டு அவ்விடத்தை பொதுமக்கள் சுற்றிவளைத்த போது சந்தேக நபர் அங்கிருந்து தப்பிச் செல்ல முற்பட்டுள்ளார்.

இதன்போது பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ள சந்தேக நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதேவேளை சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-2)

# நாட்டின் நீதியமைச்சர் என்று சொல்வதற்கு வெட்கப்படுகிறேன்
## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் நீதி அமைச்சர் என்று சொல்லிக் கொள்வதில் வெட்கமடைவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் எவ்வாறான சட்டம் அமுல்படுத்தப்படுகின்றது என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

மாடுகளைக் கொன்றால் கையை வெட்டுவேன் என ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான நடவடிக்கைகளினால் மக்களுக்கு சட்டம் மீதான மரியாதை குறைவடையக் கூடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான காட்டு அரசியல் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான சம்பவங்களுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டுமாயின் முதுகெலும்புடன் கூடிய அரசியல் சக்தியொன்றை உருவாக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்திற்குள் அங்கம் வகிக்கும் கட்சி என்ற ரீதியில் இந்தப் பிரச்சினை குறித்து கேள்வி எழுப்பக்கூடிய உரிமை இருக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# நிதி நிறுவனங்கள் தொடர்பில் புதிய சட்டங்கள் நாடாளுமன்றில் அறிமுகம்

(கொழும்பு)

நிதி நிறுவனங்கள் தொடர்பில் புதிய சட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி அனுமதிப்பத்திரமற்ற எந்தவொரு நிதி நிறுவனமும் வைப்புக்களை ஏற்றுக் கொள்ள முடியாது. நிதிநிறுவனங்கள் தொடர்பான புதிய சட்டத் திருத்த யோசனைகளை நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரமின்றி வைப்புக்களை ஏற்றுக் கொள்ளும் நபர்களுக்கு ஐந்து ஆண்டு கால சிறைத்தண்டனை அல்லது 50 இலட்ச ரூபா அபராதமும் விதிக்கப்படலாம்.

சட்டவிரோதமான முறையில் நிதிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் நிதி நிறுவனங்களின் சொத்துக்களை பறிமுதல் செய்யும் அதிகாரமும் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் அனுமதி பெற்றுக் கொண்ட நிறுவனங்கள் அல்லது நபர்களைத் தவிர்ந்த வேறு எவரும் மக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்ள முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் செலிங்கோ நிறுவனத்தின் கோல்டன் கீ மற்றும் சக்வித்தி ரணசிங்கவின் வைப்புத் திட்டம் போன்றவற்றினால் மக்கள் பெருமளவு பணத்தை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான மோசடிகளை தவிர்க்கும் நோக்கில் அரசாங்கம் புதிய சட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. (4-2)

# இலங்கைக்கு 8 ஆவது தவணைகடன் கொடுப்பது தொடர்பில் பரிசீலனை
## சர்வதேச நாணய நிதியம் தகவல்

(கொழும்பு)

இலங்கைக்கு வழங்கி வரும் 2.6 பில்லியன் டொலர்களில் 8 ஆவது தவணைக் கடன் கொடுப்பனவுக்கான பரிசீலனை இன்னும் மேற்கொள்ளப்பட வில்லை என்று சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

இதுவரை இலங்கைக்கு குறித்த 2.6 பில்லியன் டொலர்களில் 7 தவணைக்கடன் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் 7 ஆவது தவணைக் கொடுப்பனவை இலங்கை எவ்வாறு பயன்படுத்தியது என்பது தொடர்பான முன்னேற்ற அறிக்கை இன்னும் பரிசீலனை செய்யப்படவில்லை.

இன்னும் அதற்கான காலவரையறையும் செய்யப்படவில்லை என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கோசி மத்தாய் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இலங்கையின் ரூபா நாணய பரிமாற்றத்தை இலகுபடுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியிருந்தமையை அடுத்தே சர்வதேச நாணய நிதியத்தின் கருத்து தற்போது வெளியாகியுள்ளது. (4-2)

# காலபோகம் தொடர்பாக ஆலோசனைக்கூட்டம்

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் காலபோக விவசாயம் சம்பந்தமாக ஆலோசனைக்கூட்டம் கடந்த 19 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் பூநகரி பிரதேச செயலர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பூநகரி கமநல சேவை அலுவலர், கிளிநொச்சி மாவட்ட கமத்தொழில் உதவி ஆணையாளர், கால்நடை வைத்திய அதிகாரி, நீர்பாசனத் திணைக்கள அமைப்பின் தலைவர்கள், பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயம் சம்பந்தமான பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடினார்கள்.

பல பிரதிநிதிகள் வறட்சி காரணமாக கால்நடைகளுக்குக்கான நீர்த் தட்டுப்பாடு தொடர்பாக தாமாக எடுத்துரைத்ததைத் தொடர்ந்து குளங்களில் உடனடியாக கேணி அமைப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அத்தோடு காலபோக விவசாயம் சம்பந்தமான உரமானியம், விதை நெல் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டது.

அத்தோடு கமக்கார அமைப்பும் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக காணி பயன்பாட்டுக் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது. (4-12-84)


# அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டம்


(கொழும்பு)

மஹிந்த சிந்தனையின் கீழ் வவுனியா மாவட்டத்திலுள்ள அரச ஊழியர்களுக்காக நிர்மாணத்துறை பொறியியல் சேவைகள் மற்றும் வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சினால் ஜனசெவன வீட்டு திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ள வீடமைப்பு திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாளை சனிக்கிழமை வேப்பங்குளத்தில் இடம்பெறவுள்ளது.


இந்நிகழ்வில் அமைச்சர்களான விமல் வீரவன்ச. அமைச்சர் றிசாட் பதியுதீன், வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் பத்து இலட்சம் வீடுகள் கட்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-2)





ஹற்றன் நஷனல் வங்கியின் மானிப்பாய் கிளையின் முதலாவது வருட பூர்த்தி வைபவம் கடந்த 20 ஆம் திகதி ஹற்றன் நஷனல் வங்கி மானிப்பாய் கிளையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மானிப்பாய் கிளை ஹற்றன் நஷனல் வங்கி ஊழியர்களையும் இவ் வங்கி ஊழியர்களால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு குருதி வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.




யாழ். மாவட்ட தற்போதைய நிலை மற்றும் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடலொன்று வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, யாழ். மாவட்ட பொலிஸ் உயர் அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுவினர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்- என்.குமார்)

# நீதிமன்ற ஊழியர்களை அச்சுறுத்திய நபருக்கு பிணை

(கொழும்பு)

மன்னார் நீதிமன்ற ஊழியர்களை தொலைபேசிமூலம் அச்சுறுத்திய சந்தேக நபர் பிணையில் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சிலாபம் பிரதேசத்தை சேர்ந்த நபர் ஒருவர் மன்னார் நீதிமன்ற ஊழியரை தொலைபேசியூடாக அச்சுறுத்தியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து குறித்த ஊழியர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து குறித்த சந்தேகநபரை சிலாபத்தில் வைத்து பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மன்னார் நீதிவான் கே. ஜீவராணி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

இவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது தலா 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான இருவரின் சரீர பிணையிலும் 50 ஆயிரம் ரூபாய்ரொக்கப் பிணையிலும்செல்ல உத்தரவிட்டார். (4-2)

# நலன்புரி முகாம்களில் 7427 பேரே இன்னமும் தங்கியுள்ளனர்

## அமைச்சர் குணரட்ண வீரக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

வடபகுதியில் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பாக எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்பியதையடுத்து பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றமை வட பகுதியிலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளவர்களின் எண்ணிக்கை குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க அரச தரப்பிடம் வினவினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் குணரட்ன வீரக்கோன், 7 ஆயிரத்து 427 பேர் தொடர்ந்து முகாம்களில் தங்கியுள்ளதாக கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க இதற்கு ஆட்சேபனை தெரிவித்ததையடுத்து சபையில் கடும் வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டன. (4-9)

# ஓரின சேர்க்கையாளர்களின் எண்ணிக்கை இலங்கையில் அதிகரிப்பு

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் ஓரினச் சேர்க்கையாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அண்மையில் எடுக்கப்பட்ட ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

பௌத்த மதக் கலாசாரம் செழுமையாகக் காணப்படும் இலங்கை போன்ற நாட்டில் இவ்வாறு ஓரினச் சேர்க்கையாளர்கள் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது.

நாட்டில் 30 ஆயிரம் ஓரினச் சேர்க்கையாளர்களும் 40 ஆயிரம் பாலியல் தொழிலாளர்களும் இருப்பதாக ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலைநகர் கொழும்பில் மட்டும் சுமார் 8 ஆயிரம் பாலியல் தொழிலாளிகள் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் பாலியல் தொழிலுக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவோர் சமூக ரீதியாக இழிவுபடுத்தப்படுகின்றனர். பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழக விடுதிகளில் அதிகளவில் ஓரினச் சேர்க்கைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

பெரிய நகரங்களில் அதிகளவில் பாரியளவில் ஓரினச்சேர்க்கை இடம்பெறுவதாகக் தெரிவிக்கப்படுகிறது.

பாலியல் நோய்கள் பரவுவதனை தடுத்து நிறுத்துவதற்கு நாடு தழுவிய ரீதியில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக இலங்கை தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் நிமால் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பாலியல் தொழிலில் ஈடுபடுவோர் மற்றும் ஓரினச் சேர்க்கையாளர்களின் எண்ணிக்கை ஆய்வுத் தகவல்களை விடவும் அதிகமாக இருக்கக் கூடும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நாடு முழுவதிலும் ஆயிரத்து 388 எயிட்ஸ் நோய்த் தொற்றாளிகள் இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. (4-2)




★ 1799-இலங்கையில் அரச ஆணைப்படி சித்திரவதை மற்றும் கொடூரமான தண்டனைகள் நிறுத்தப்பட்டன. மத சுதந்திரம் அமுலுக்கு வந்தது.

★ 1846-நெப்டியூன் கோள் பிரெஞ்சு வானியலாளர் உர்பெயின் ஜோசப் மற்றும் பிரித்தானிய வானியலாளர் ஜோன் அடம்ஸ் ஆகியோரால் கண்டு பிடிக்கப்பட்டது.

★ 1884-ஹேர்மன் ஹொலரித் கணிப்பானுக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1889-நின்டெண்டோ கம்பனி ஆரம்பிக்கப்பட்டது.

★ 1932-ஹெஜாஸ் மற்றும் நெஜிட் ஆகிய மன்னராட்சிகள் சவுதி அரேபியா என்ற பெயரில் இணைந்தன.

★ 1941-நாசிகளின் அவுஷ்விட்ஸ் வதை முகாமில் நச்சுவாயுக் கொலைகள் முதற்தடவையாகப் பரிசோதிக்கப்பட்டன.

★ 1966-நாசாவின் சேர்வெயர் 2 விண்கலம் சந்திரனின் கோர்ப் பனிக்கஸ் என்ற இடத்தில் மோதியது.

★ 1983-இலங்கை மட்டக்களப்பு சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியற் கைதிகள் சிறையை உடைத்துத் தப்பித்தனர்.

★ 1986-இலங்கை கொழும்பில் தேசிய இயற்கை வரலாற்று நூதனசாலை பொதுமக்களுக்குத் திறந்து விடப்பட்டது.

★ 2002-மொசிலா பயர் பொக்ஸ் இணைய உலாவி வெளி வந்தது.

### பிறப்புக்கள்

★ கி.மு. 480- யூரிபீடிசு, கிரேக்க நாடகாசிரியர் (இ. கி.மு. 406)

★ கி.மு. 63-அகஸ்ட்டஸ், ரோமப் பேரரசன் (இ.14)

★ 1215-குப்லாய்கான், மங்கோலியப் பேரரசன் (இ.1294)

★ 1930-ரே.சார்ள்ஸ், அமெரிக்கப் பாடகர் (இ.2004)

### இறப்புக்கள்

★ 1951-பி.யு. சின்னப்பா, தமிழ்த் திரைப்பட நடிகர், பாடகர்


★ 1973-பாப்லோ நெருடா, சிலி நாட்டில் பிறந்த கலைஞர் (பி. 1904)

★ 2002-வேணன் கொரெயா, இலங்கை ஒலிபரப்பாளர் (பி.1927)



★ 1941- ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் பிறந்த தினம்

# நவீன எண் சோதிடம்



## ஞானமுள்ளவராகவும் தர்ம சிந்தனை படைத்தவராகவும் காணப்படுவர் 52

### உடல் எண் 6 உயிர் எண் 6

6,15,24 போன்ற தேதியில் பிறந்து, தேதி, மாதம், வருடம் இம் மூன்றையும் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் 6 வருமேயானால், இவர்கள் பூரண சுக்கிர ஆதிக்கத்தில் பிறந்தவரா வர். இவர்கள் பார்ப்பதற்கு அழகாகவும், நிதானமுடைய வராகவும் காட்சியளிப்பர். எதை யும் சிந்தித்துச் செயல்படும் மனிதராவர். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று கூறாது, தன் மனதில் தோன்றிய கருத்துக் களைத் தெளிவாக எடுத்துக் கூறுவர். எல்லோரும் நலமாக வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். தனது முன்னேற் றத்தில் கண்ணுங்கருத்துமாயிருக் கும் இவர்கள் ஒவ்வொரு மனி தனும் உயர்ந்தால் நாடு தானாக உயரும் என்ற எண்ணம் கொண் டவர்.

இவர்களது பிறந்ததேதிக்கு பொருத்தமானதாக பெயர் அமைந்து விட்டால் வாழ்க்கை யில் உச்ச ஸ்தானத்தை அடைவர். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் ஞானமுள்ளவராகவும், தர்ம சிந்தனை படைத்தவராகவும், பலருக்கு அறிவுரை கூறுபவர் களாகவும் இருப்பதோடு பெரும் செல்வந்தவராகவும் வாழ்வர். ஆனால் பெயர் பொருத்தமின்றி இருந்தால் முன்னேற்றம் அவ் வளவு சிறப்பாக இருப்பதில்லை.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

எங்கு சென்றாலும் போட்டியும், பொறாமையும் சந்திக்க நேரிடு கிறது. இதனால் பெயரைப் பிறந்த தேதி எண்களுக்குப் பொருத்தமாக அமைத்துக் கொள் வது அவசியம். இளகிய மனம் கொண்ட இவர்கள் பிறருக்கு உதவுவதாலும், சமூக சேவை செய்வதாலும் மக்களிடத்து மதிப் புள்ள மனிதராக விளங்குவர்.

சிலர் இயற்கையிலேயே வசதி படைத்தவர்களாக இருந்தாலும், பெயர் நன்றாக அமையாவிட் டால் மனம் குழம்புவர். எந்த ஒரு பிரச்சனை வந்தாலும் சிறிது நேரம் சிந்தித்து உடனே முடி வெடுக்கும் ஆற்றல் பெற்றவர். இவர்களுடைய எண்ணங்கள் மின்னல் வேகத்தில் செல்லக் கூடியது. இந்த உலகத்திலுள்ள நன்மைகள் எல்லாம் நாம் அனு பவிப்பதற்காக உருவாக்கப்பட்டதே என்று கூறுவர். இதனால் இவர் களை சுக போகத்தைப் பூரணமாக அனுபவிக்கும் மனிதர் என்று சொல்லலாம்.

தத்துவம், மதம், சட்டம், கணிதம், சாஸ்த்திரம் போன்ற வற்றை ஆராய்ச்சி செய்வர். பசு மையான இடங்களையும், இயற் கைச் சூழ்நிலைகளையும், மலைப் பிரதேசங்களையும் கண்டுகளிக்க ஆசைப்படுவர். இவர்களது பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாகப் பெயர் அமைந்து விடுமேயானால் இந்த உலகில் அனுபவிக்க வேண் டிய எல்லா விதமான பாக்கியங் களையும் அனுபவித்து வாழ்வர்.

ஆனால் பிறந்த தேதிக்கு பொருத்த மற்ற நிலையில் பெயர் இருக்குமே யானால் இவர்களது நிலை தலை கீழாக மாறிவிடும். நாட்டியம், இசை, போன்றவற்றில் கலை ஞானம் கொண்ட இவர்கள் எல்லோரையும் மகிழ்விக்கக் கூடிய காரியங்களைச் செய்து புகழ் அடைவர். இவர்களுக்கு மனக் கட்டுப்பாட்டால் வரக்கூடிய சித்தி கள் கைகூடும். ஆண்டவன் வழி படுதலில் ஆர்வம் கொண்டவர் களாக இருப்பர். அழகான வீடு கட்டுவதிலும், தோட்டம் அமைப் பதிலும்,புதிதுபுதிதாக ஆபரணம் செய்வதிலும் விருப்பம் உடைய வர்கள்.

வாசனைத் திரவியங்கள் என் றால் இவர்கள் மனதைக் கவரும். பெயர் பொருத்தமானதாக அமையப் பெற்றவர்கள் நல்ல வாழ்க்கைத் துணை, நல்ல ஆரோக்கியம், நல்ல குழந்தைகள், நல்ல செல்வம் ஆகியவற்றைப் பெற்று சிறப்பாக வாழ்க்கை நடத்துகின்றனர். உத்தி யோகம் பார்க்கும் சிலருக்கு பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால் படிப்படியாக உயர்ந்த ஸ்தானத்தை அடைவர். ஆனால் பெயர் பொருத்தமற்ற நிலையில் இருந்தால் பல்வேறு குழப்பத்திற்கு ஆளாவர். இதனால் பெயரை தமது பிறந்த தேதிக்குப் பொருத்தமாக மாற்றி அமைத்துக் கொள்வது அவசியம்.

**தொழில்**

இவர்கள் ஆடம்பரம் சம்பந்த மான பொருட்களை வியாபாரம் செய்வதாலும், அழகு சாதனங் கள், ஆபரணங்கள், இரும்பு சம்பந்தமான தொழில், ஜவுளி, மருந்துப் பொருட்கள், பச்சைப் பொருட்கள் போன்றவற்றாலும் உயர்வடைய வாய்ப்புள்ளது.

**நோய்**

இந்த எண்ணிக்கைகாரர்களுக்கு உஷ்ண சம்பந்தமான வியாதிகள், ரத்த அழுத்தம், சிறு நீர் பிரச் சினை பல்வலி, முதுகுவலி, போன்றவைகள் வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை**

இந்த எண்ணிக்கைகாரர்களுக்கு சுக்கிரனின் பூரண பலன் இருப் பதால் சூரியன், செவ்வாய், சுக்கிரன் போன்ற ஆதிக்கத்தில் பெயர் வைக்கலாம். மேற்குறிப் பிட்ட ஆதிக்கமான 19,37, 46,64,27,36,45,15,24,33,42,60,69 உள்ள எண்ணில் பெயர் அமை வது சிறப்பாகும்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்- 1,6

யோகமான தேதிகள்- 1,10,19, 28,6,15,24,9,18,27

யோகமான நிறம்- பச்சை, வெளிர் நீலம்,

யோகமான மோதிரக்கல்- மரகதம்

ஆகாத தேதிகள்- 3,12,21,30

ஆகாத நிறம்- ரோஸ்,ஆரஞ், கத்தரிப்பூ நிறம்

* * *

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT


### பெயர் எண்களின் பலன்

**53 எண் பலன்**

இந்த எண்ணை பெயராக கொண்டவர்கள் இளமையிலேயே முதியவர் போன்ற அனுபவத்தைப் பெறுவர். எல்லாவிடயங்களிலும் தலையிடுவர். இதனால் இவர்க ளுக்கு நிம்மதியான வாழ்க்கை அமையாது. பொதுக் காரியங் களில் ஈடுபட்டு யாரும் செய்ய முடியாத காரியங்களைச் செய்து புகழடைவர். குடும்ப வாழ்க்கை பாதிக்கும். ஆனால் 5,14,23 10,19; 7,16,25 போன்ற தேதியில் பிறந்தவர்களுக்கு கெடுதலை விளைவிக்கும்.

**55 எண் பலன்**


இந்த எண்ணைப் பெயரில் உடையவர்களுக்கு உடல் பல மும் மன பலமும், கட்டுப் படுத்த முடியாத அளவிற்கு வளர்ந்து விடும். நீதி, நேர்மை, இவை இரண்டும் பெற்ற இவர்கள் நிதானத்தை இழப்பர். இதனால் சண்டை மூளும்.



போன்ற தேதியில் பிறந்தவர் களுக்கு மட்டும் இந்த எண் நன்மையளிக்கும்.

**54 எண் பலன்**

5 என்ற புதனும், 4 என்ற ராகுவும் ஒன்று சேர்ந்து 54 எண் வருவதால் சுறுசுறுப்பும்,நல்ல பேச்சாற்றலும் கொண்டு சிறந்து விளங்குவர். நல்ல புகழும், செல்வமும் பெற்று பலருக்கு அறிவுரை கூறும் அறிவாளியாகத் திகழ்வர். தான் என்ற அகந்தையில் சில நேரங்களில் தோல்வியுறுவர். விட்டுக் கொடுக்கும் மனப் பான்மை இருந்தால் நல்ல முன்னேற்றம் கிடைக்கும் 9,18,27 போன்ற தேதி களில் பிறந்தவர்களுக்கு,சிறந்த வாழ்க்கை அமையும் ஆனால் 1,11, அச்சண்டையிலும் வெற்றி பெறுவர். பேரறிவும், பேரும், புகழும் பெற்ற இவர்கள் தனக்கு ஒரு சரியான வாழ்க் கையை அமைத்துக் கொள்ளத் தெரியாதவர்களாவர். வியாபார விலாசங்களுக்கு இந்த எண் ணைப் பெயராக அமைப்பதாக இருந்தால் வியாபாரக் கூட்டா ளிகள் இருக்கக்கூடாது.



(தொடரும்)

# மக்களுக்கு அநீதியிழைத்தால் தகுந்த பாடம் கற்பிப்போம்

## சரத்பொன்சேகா தெரிவிப்பு



களனியில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் அமைச்சர் மத பேதத்தை தூண்டும் வகையில் செயற்பட்டு வருவதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன் சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் போதைப் பொருள் விற்பனை செய்யும் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினர் நேற்று முன்தினம் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

களனியைச் சேர்ந்த அமைச்சர் மக்களின் கை, கால்களை உடைப்பதாக எச்சரிக்கின்றனார்.

இவ்வாறான நபர்கள் பொது மக்களுக்கு தொடர்ந்தும் அநீதி இழைத்ததால் வாழ்க்கையில் மறக்க முடியாத பாடங்களை நாம் கற்பிப்போம் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தோள் பட்டையில் ஏற்பட்ட உபாதைக்கு சிகிச்சை பெற்றுக் கொள்ளும் நோக்கில் கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு சென்றிருந்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# முல்லைத்தீவு நிலைமை குறித்து அமெரிக்க தூதுவர் ஆராய்வு

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் பற்றீசியா புட்டினீஸ் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்து மாவட்டத்தின் நிலைமைகள் குறித்து அரச அதிபரிடமும் பொது மக்கள் மற்றும் மீனவர்களிடம் கேட்டறிந்துள்ளார்.

மீன்பிடித்துறை திணைக்களமும் உலக உணவு விவசாய நிறுவனமும் இணைந்து யுஎஸ்எயிட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடத்தப்படுகின்ற மீன்பிடி தொழில் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கின் ஆரம்ப வைபவத்திலும் அமெரிக்க தூதுவரும் யுஎஸ்எயிட் நிறுவனத்தின் தலைமை அதிகாரியும் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு அரச செயலகத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தின் போது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் இவர்கள் விரிவாகப் கேட்டறிந்து கொண்டனர்.

இதனையடுத்து செயலகத்தில் அரச அதிபர் அ.பத்திநாதனைச் சந்தித்த போது மாவட்டத்தில் தற்போதைய நிலைமைகள், மீள்குடியேற்றம், கண்ணிவெடி அகற்றும் பணிகள் தொடர்பாக முல்லைத்தீவு அரச அதிபர் அமெரிக்க தூதுவருக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர் செல்வபுரம் கத்தோலிக்க ஆலயத்தில் மாவட்டத்தின் பொதுமக்களையும் அமெரிக்க தூதுவர் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் போது மக்கள் மீள்குடியேற்றத்தில் எதிர்நோக்கியுள்ள பற்றாக்குறைகள், பிரச்சினைகள், யுத்த சூழ்நிலையின் பின்னரும் தங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள், கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள், காணாமல் போயுள்ளவர்கள், பொது மக்களின் பாதுகாப்பு நிலைமைகள், கிறிஸ் மனிதனின் தொல்லைகள், அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள், அச்ச நிலைமைகள் என்பன குறித்து இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டவர்கள் அமெரிக்க தூதுவருக்கு எடுத்துக் கூறினார்கள்.

அமெரிக்க தூதுவர் வவுனியா, மன்னார், மாவட்டங்களுக்கு விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# கே.பி.யின் 600 வங்கிக் கணக்குகள் 15 கப்பல்களுக்கு என்ன நடந்தது?

## ஹந்துன்நெத்தி எம்.பி. கேள்வி

குமரன் பத்மநாதன் ஆகிய கே.பி கைது செய்யப்பட்ட பின்னர் அவருக்கு 600 வங்கிக் கணக்குகளும் 15 கப்பல்களும் இருப்பதாக அரசாங்கம் அறிவித்திருந்தாலும் கூட இவற்றுக்கு என்ன நடந்துள்ளது என்பது தொடர்பில் அரசாங்கம் இதுவரையிலும் எவ்வித பதிலும் அளிக்கவில்லை என்று ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிதி மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதி சேகரிப்பதை ஒடுக்கும் சமவாய திருத்தச் சட்டப் பிரேரணை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியினால் 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிதி புலனாய்வுத்துறை உண்மையாக இருந்திருந்தால் புலிகளின் சொத்து விபரத்தை சரியாக வெளிப்படுத்தியிருக்கும் என்றும் அவர் இதன் போது சுட்டிக்காட்டினார். (4-2)

# இலங்கை அரசாங்கத்திற்கு தண்டனை வழங்க வேண்டும்

## 17 அரசசார்பற்ற நிறுவனங்கள் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திற்கும் படை வீரர்களுக்கும் தண்டனை விதிக்கப்பட வேண்டுமென 17 அரச சார்பற்ற நிறுவனங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் குழுவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

போர்க்குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றதாகத் தெரிவித்து இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரகசியமான முறையில் அவசரமாக இந்த கோரிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தாருஸ்மான் அறிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறும் குறித்த அரச சார்பற்ற நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த 16 ஆம் திகதி இந்த விசேட கோரிக்கைகள் அடங்கிய மகஜர் நவநீதம்பிள்ளையின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. (4-2)

## க.பொ.த.உ/த.விடைத்தாள் மதிப்பிடும்

### ஆசிரியர்களுக்கு தங்குமிட வசதியில்லையென குற்றச்சாட்டு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள்களை திருத்துவதன் பொருட்டு கொழும்பு வந்துள்ள ஆசிரியர்களுக்கு உரிய வகையில் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை இலங்கை ஆசிரியர் சங்கம் சுமத்தியுள்ளது. சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

வினாத்தாள் திருத்துவதன் பொருட்டு வந்துள்ள ஆசிரியர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுப்பதாக தெரிவித்தார். (4-2)

# விசர்நாய்க்கடி மரணத்தின் எண்ணிக்கையில் துரித வீழ்ச்சி

(கொழும்பு)

விசர்நாய்க்கடியினால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையில் இந்த வருடம் துரித வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாய்களுக்குகான இனவிருத்திக் கட்டுப்பாடு மற்றும் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டம் ஆகியன வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டமையே இதற்குக் காரணம் என விசர்நாய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பீ.எல்.ஏ.ஷரிஷ்சந்திர சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு விசர்நாய்க் கடியினால் 51 மரணங்களும் இந்த வருடத்தின் முதல் 9 மாதங்களில் 33 மரணங்களும் பதிவாகியுள்ளன.

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டளவில் இலங்கையை விசர்நாய்க்கடியற்ற நாடாக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக டாக்டர் பீ.எல்.ஏ. ஷரிஷ்சந்திர குறிப்பிட்டார்.

அதன்பிரகாரம் விசர்நாய்க்கடியினை கட்டுப்படுத்துவதற்காக தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து திட்டங்களும் 2016 ஆம் ஆண்டு வரை முன்னெடுக்கப்படவுள்ளதாக விசர்நாய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் கூறினார். (4-2)

# உலகில் ஐந்தாவது உயரமான கட்டடம் இலங்கையில் நிர்மாணம்

(கொழும்பு)

உலகின் ஐந்தாவது உயரமான கட்டடம் இலங்கையில் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தலைநகர் கொழும்பிலிருந்து சில கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பெஹலியகொட பிரதேசத்தில் இந்த பாரிய கட்டடம் நிர்மாணிக்கப்படுகின்றது.

குறித்த கட்டடத்தின் உயரம் 350 மீற்றர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்று ஆண்டுகளில் இந்த கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

தொலைக்காட்சி நிலையங்கள், வானொலி நிலையங்கள், உணவு விடுதிகள், வர்த்தக நிலையங்கள், காரியாலயங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் இந்த கட்டடத்தில் அமைக்கப்படவுள்ளன. (4-2)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/பாரதி வித்தியாலயத்தில் கல்வி கற்று தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 174 புள்ளிகளைப் பெற்று கிராமத்திற்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துத் தந்த விக்னேஸ்வரன் திசானி அவர்களை பாராட்டுகின்றோம்.



விக்னேஸ்வரன் திசானி

புள்ளி -174

வாழ்த்துவோர்:-

வள்ளுவர்புரம் கிராம அபிவிருத்திச் சங்கம்,
வள்ளுவர்புரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்,
ஜீவஜோதி முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள்.

(6194)


# வினாடிவினாப் போட்டி முடிவு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற- 2011 இற்குரிய வினாடி வினாப் போட்டி முடிவுகள் துணுக்காய் கல்வி வலய கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**தரம்-06**

இ.பிறைவாணி (மு/அணிஞ்சியன்குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்), ஜெ.கிருசிகா (மு/அணிஞ்சியன்குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்), ம.துலக்ஷனா (2 ஆம் இடம்) (மு/அணிஞ்சியன்குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்)

**தரம்-07**

ஜெ.கேதாரணி (மு/பாளிநகர் மகா வித்தியாலயம்), யோ.நிரோஜா (மு/அணிஞ்சியன் குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்), த.தர்ஷிகன் (மு/அணிஞ்சியன்குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்)

**தரம்-08**

பி.பிரசாந்தினி (மு/பாளிநகர் மகா வித்தியாலயம்), இ.பானுஜா (முதலாமிடம்) (மு/அணிஞ்சியன் குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்), ஆ.ரவீனா (முதலாமிடம்) (மு/அணிஞ்சியன் குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்)

**தரம் -09**

ஜெ.தர்மிகா (மு/அணிஞ்சியன் குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்), கை.அபிரா (மு/அணிஞ்சியன் குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்), மு.துலக்ஷன் (2 ஆம் இடம்) (மு/பாளிநகர் மகா வித்தியாலயம்)

**தரம்-10**

கு.துளசிகா (மு/நட்டாங்கண்டல் அ.த.க. பாடசாலை), சி.யுவிதா (மு/நட்டாங்கண்டல் அ.த.க. பாடசாலை), நா.அச்சுதன் (2 ஆம் இடம்) (மு/யோகபுரம் மகா வித்தியாலயம்)

**தரம்-11**

ப.தயாளினி (மு/மல்லாவி மத்திய கல்லூரி), அ.நிலுஜா (முதலாமிடம்) (மு/மல்லாவி மத்திய கல்லூரி), ந.கார்த்திகா (3 ஆம் இடம்) (மு/யோகபுரம் மகா வித்தியாலயம்).

(4-12-15)





பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் தீவகப் பகுதியிலுள்ள குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இப்புனரமைப்பு வேலைகளை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், இராணுவப் பொறியியலாளர்கள் நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டதையும் குளங்களின் புனரமைப்பு வேலைகள் நடைபெறுவதையும் படங்களில் காணலாம்.(படங்கள்:- என்.குமார்)

# எமது பொறுப்புக்களை சரியான முறையில் நிறைவேற்ற வேண்டும்

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அனைவரும் தமக்குரிய பொறுப்புக்களை உரியவாறு நிறைவேற்றுவார்களாயின் ஆச்சிரியம் மிக்க நாட்டை உருவாக்குவதற்கான பயணத்தை வெற்றிகொள்ள முடியுமென பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பயாகலயில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கொண்டவாறு தெரிவித்துள்ளார்.

பிரதி அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தலைமையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட பயாகல கந்தேவத்த ஸ்ரீ சிறுமுனி விகாரையை திறந்து வைக்கும் நிகழ்வு இன்று நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

அனைவராலும் நாட்டிற்கு ஏதாவது ஒரு சேவையை வழங்க முடியும் எனவும் தமக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பொறுப்புக்களை உரிய 'முறையில் நிறைவேற்றும் பட்சத்தில் ஆச்சரியம்மிக்க நாட்டை உருவாக்கும் பயணம் வெற்றியளிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு செயலாளர் ஏன் குப்பைகளை அள்ள வேண்டும் என தாம் பத்திரிகையொன்றில் படித்ததாகவும் அதன்மூலம் ஏதேனும் சேவையை வழங்க முடியமெனின் அதனையே அரச அதிகாரி என்ற வகையில் செய்ய வேண்டும் எனக் கருதுவதாகவும் அவர் குறிப்பிடுகிறார். (4-2)

# பங்களாதேஷில் எரிபொருள் உற்பத்தி நிலையங்கள் அமைத்தது இலங்கை

(கொழும்பு)

இலங்கை பொறியியல் துறையின் அறிவைப் பயன்படுத்தி பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் இரண்டு எரிபொருள் மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள் ளன.

இந்த மின் பிறப்பாக்கி நிலையங்கள் மூலம் 200 மெகாவோட் அலகுகள் மின்சார உற்பத்தி செய்யப்படுவதாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் பங்களாதேஷின் தேசிய கட்டமைப்புடன் அண்மையில் இணைத்துகொள்ளப்பட்டது.

குளிரூட்டல் கட்டமைப்பு, களஞ்சியப்படுத்தி வைக்கும் தாங்கிகள், பம்பி உபகரணங்கள், குறைந்த மின்வலு கொண்ட கட்டமைப்புகள், கண்காணிப்பு கட்டமைப்புகள் ஆகிய அனைத்தும் இலங்கையிலேயே உற்பத்தி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# ஜே.வி.பி.கட்சிக்குள் உட்பூசல்கள் இல்லை

## சோமவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி முன்பு போன்ற செயற்படுகிறது. இக்கட்சிக்குள் பேசுவது போன்று எந்தவிதமான குழப்பமும் இல்லை. வதந்திகளுக்கு பதில்சொல்ல வேண்டிய அவசியமும் எனக்கில்லை. நாங்கள் இப்பொழுது உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பில் கவனம் செலுத்திவருவதால் இப்படியான வதந்திகளை நாங்கள் பெரிதுபடுத்துவதில்லை என அக்கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி குழப்பம் உருவாகியிருப்பதாக வெளிவந்த செய்திகள் தொடர்பில் சோமவன்ச அமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவிக்கையில்,

கட்சிகளுக்குள் உருவாகியிருக்கின்ற சதி முயற்சிகளுக்கு நாங்கள் ஒருபோதும் கையசைத்துப் போகப்போவதில்லை. இவ்விடயம் தொடர்பில் முன்பை விட கூடிய கவனத்தினைச் செலுத்தி பிரச்சினைகளை களையவிருக்கிறோம்.

கட்சியினை புதிய சக்தியுடன் வலுவடையச் செய்து நாட்டில் ஜனநாயகத்தையும் நீதியையும் நிலைநாட்டுவது பற்றி கூடிய கவனம் செலுத்தவிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்.

கட்சி அங்கத்தவர்களுக்குள் ஏதாவது குழப்பம் நிலவினால் அதனை உரியமுறையில் தீர்த்து வைத்து மக்கள் முன்னணியை சக்திமிக்க கட்சியாக உருவாக்கி நாட்டினை கட்டியெழுப்புவதே எங்களது குறிக்கோள் எனவும் ரில்வின் சில்வா மேலும் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொலை செய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர் ரஞ்சிதத்தின் சகோதரரான பிரேமகுமார் குணரத்தினம் தலைமையில் புதிய ஜே.வி.பி உருவாகி வருகிறது என்ற செய்தி அண்மையில் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(4-2)


## வடமராட்சி கிழக்கு
## பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் (வ.து)

### பதவி வெற்றிடம்

சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 10.10.2011 க்கு முன்னராக தமது பெயர், முகவரி, கல்வித்தகைமை அனுபவம், என்பவற்றைக் குறிப்பிட்டு தலைவர், வடமராட்சி பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் (வ.து.)

என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ விண்ணப்பிக்கலாம். பூரணவிபரங்களைக் கொண்டிராத விண்ணப்பங்களும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

1.பதவி - பொதுமுகாமையாளர் :-101/11

சம்பள அளவுத்திட்டம்:-10450-100× 10 -110×10-12550

தகைமைகள்

அ. கூட்டுறவுப்பணியாளர் 12 ஆவது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வைமட்ட பதவி ஒன்றில் மூன்று வருடங்களுக்கு குறையாத அல்லது கூட்டுறவுப் பணியாளர் 13 ஆவது சம்பளத்திட்ட பதவி ஒன்றில் ஆறு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் அல்லது சமமான தகைமைகளுடன்

அல்லது

இ. கூட்டுறவுப்பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமைமட்ட பதவியொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

2.பதவி - களஞ்சிய முகாமையாளர்:-208/16

சம்பள அளவுத்திட்டம்:-9200-70× 10-75×10-10650

தகைமைகள்

அ. கூட்டுறவுப் பணியாள்ர் 17 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் ப்தவியொன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது

ஆ.கூட்டுறவுப்பணியாளர் (சாதாரணம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரண தரத்தில்) கணிதம், வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இருதடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தி.

3.பதவி- சாரதி:-312/15

சம்பளஅளவுத்திட்டம்:-9450-75×10 - 80×10 - 11000

தகைமைகள்

அ. 5 ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும் உழவு இயந்திர அனுமதிப்பத்திரங்களுடன் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

மேற்குறித்த பதவிகளுக்கான வயதெல்லை 21-45 வயதுக்கிடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

1) கூட்டுறவு சங்கங்களில் பணிபுரிவோருக்கு வயதெல்லை கருத்திற் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் சங்கங்களில் பணிபுரிவோர் சங்கத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

2) தெரிவு செய்யப்படுபவர்கள் சங்கத்தால் விதிக்கப்படும் பிணையினைச் செலுத்தல் வேண்டும்.

ந.யோகராசா
தலைவர்,

மருதங்கேணி

(6196)

# முதல்வர் ஜெயலலிதா நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்

## நீதிமன்றம் உத்தரவு



(பெங்களூர்)

தமிழக முதல்வர் ஜெயலலிதா பெங்களூர் சிறப்பு நீதி இல் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என கர்நாடக அரசு பொலிஸ் துறைக்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது.தமிழக முதல்வர் ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்ததாக தொடரப்பட்ட வழக்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

இந்த வழக்கில் சாட்சிகளிடம் விசாரணை முடிந்த நிலையில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முதல்வர் ஜெயலலிதாவிடம் கேள்விகள் கேட்க வேண்டும். எனவே சட்டவிதி 313 ஐ பயன்படுத்தி அவரை நீதிமன்றில் ஆஜர் படுத்த வேண்டும் என அரசு வழக்கறிஞர் கேட்டதையடுத்து நேரில் ஆஜராக நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இதை எதிர்த்து ஜெ.தரப்பில் கர்நாடக உயர்நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் சென்றனர். வழக்கு தொடர்பாக எதிர்வரும் ஒக்டோபர் மாதம்20 ஆம் திகதி நேரில் ஆஜராக வேண்டும். பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யும்படி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி மல்லிஹார்ஜீனய்யா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில் வழக்கறிஞர் ஆச்சார்யா, உதவி வழக்கறிஞர் சவுட்டா, ஜெ. வழக்கறிஞர் கந்தசாமி, சசிகலா வழக்கறிஞர் வெங்கடேஸ்வரலு, சுதாகரன் வழக்கறிஞர் சரவணகுமார், இளவரசி வழக்கறிஞர் அசோகன் ஆகியோர் ஆஜராகினர்.

நீதிமன்றத்தில் நடந்த விவாதம் வருமாறு, ஜெ.வழக்கறிஞர் உச்ச நீதிமன்றம் உத்தரவை நீதிபதியிடம் கொடுத்து ஜெ.பிரிவு பாதுகாப்பில் உள்ளார். நீதிமன்றில் ஆஜராகும் போது அவருக்கு தேவையான பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றார்.

அரசு வழக்கறிஞர் பாதுகாப்பு குறித்து கர்நாடக பொலிஸ் துறை,உளவுத்துறை அரசு ஆகியவை கவனத்தில் கொள்ள வேண்டும்.

நீதிபதி, முதல்வர் ஜெயலலிதா ஒக்டோபர் 20 இல் பெங்களூர் சிறப்பு நீதிமன்றில் ஆஜராகவும் அவருக்கு தேவையான பாதுகாப்பளிக்கவும் உயர் நீதிமன்றில் பரிந்துரைத்துள்ளது.

இது குறித்து கர்நாடக அரசு உளவுத்துறை, காவல்துறை ஆகியவை ஆய்வு செய்து ஒக்டோபர் 10 ஆம் திகதிக்குள் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

ஒக்.20 இல் விசாரணை முடியவில்லை என்றால் அடுத்தடுத்த நாட்களிலும் விசாரணை தொடரலாம். அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். இந்த வழக்கு ஒக்டோபர் 10 ஆம் திகதி ஒத்தி வைக்கப்படுகிறது.

(4-2)

# நக்சலைட்டுகள் பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும் -பா.சிதம்பரம்

நக்சலைட்டுகள் வன்முறையை கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு முன்வரவேண்டும். அதே சமயம் கொள்கைகள் மற்றும் ஆயுதங்களை விட வேண்டிய அவசியமில்லை என பா.சிதம்பரம் கூறியுள்ளார்.

மேற்கு வங்க மாநில கோல்கட்டா நகரில் நடந்த வர்த்தகம் தொடர்பான நிகழ்ச்சியில் மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் நேற்று முன்தினம் கலந்துகொண்டார்.

அப்போது அவர் நிருபர்களிடம் கருத்து தெரிவிக்கையில், எந்தக் காலத்திலும் இல்லாத வகையில் தற்போது இந்தியாவுக்கு பன்மடங்கு பாதுகாப்புச் சவால்கள் ஏற்பட்டுள்ளன.

ஜம்முகாஷ்மீர் பகுதியில் பயங்கரவாதிகள் ஊடுருவல், மத்திய பகுதி மாநிலங்களில் மாவோயிஸ்ட் மற்றும் நக்சலைட்கள் பிரச்சனை, வடக்கு, கிழக்கு மாநிலங்களில் பிரிவினைவாத குழுக்கள் மட்டுமல்லாது அவ்வப்போது பயங்கரவாத மிரட்டல் விடும் அமைப்புகள் என பல்வேறு பிரச்சினைகள் உள்ளன.

இவற்றை கையாள வேண்டும் எனில் இந்தியாவுக்கு கூடுதல் வலிமை அவசியமாகிறது. அதற்கேற்ப நாடு முழுவதும் முழு விழிப்புடன் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பொலிஸார் எண்ணிக்கையை அதிகப்படுத்தி ஐ.பி-சி.பி.ஐ-என்.ஐ.ஏ மற்றும் ரோ போன்ற நிறுவனங்கள் உதவியுடன் உளவுப் பணிகளை மேலும் விரிவுபடுத்துவது அவசியம்.

நாட்டில் இடதுசாரி பங்கரவாதம் முதன்மை பிரச்சினையாக உள்ளது. இதனால் பெரும எவு மக்கள் உயிரிழந்துள்ளனர். நக்சலைட்கள் அனைவரும் வன்முறையை கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும். ஆயுதங்கள், கொள்கைகளை கைவிட வேண்டும் என்ற அவசியம் இல்லை. இது போன்ற பிரச்சினைகளில் வன்முறையை விட பேச்சு வார்த்தை மூலம் தான் தீர்வு காண முடியும்.

தற்போதைய சூழ்நிலையில் எல்லா நாடுகளிலும் பயங்கரவாதம் தலைவிரித்தாடுகிறது. பயங்கரவாத முகாம்களான பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளுக்கு அருகில் உள்ளதால் இந்தியாவிலும் இதன் தாக்கம் இருக்க செய்கிறது.

நட்புறவு நாடுகளை மாற்றிக் கொள்ளலாம். அயல் நாடுகளை மாற்ற முடியாது. இது புவியியல் சார்ந்த பிரச்சினை என்பதால் அயல் நாடுகளுடன் நட்புறவாகச் செல்லவே இந்தியா விரும்புகிறது. (4-2)

# தி.மு.க.வில் இருந்து விலகினார் குணச்சித்திர காமெடி நடிகர் தியாகு

(சென்னை)



நடிகர் தியாகு தி.மு.க வில் இருந்து விலகினார். பிரபல குணசித்திர காமெடி நடிகர் தியாகு 300 படங்களுக்கும் மேல் நடித்துள்ளார். தி.மு.க வில் இணைந்து அக்கட்சியின் முன்னணி பேச்சாளராகவும் செயற்பட்டு வந்தார். தி.மு.கவில் இருந்து தியாகு தற்போது திடீரென விலகியுள்ளார். தி.மு.கவில் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்வதாக கட்சியின் தலைவர் கருணாநிதிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

பின்னர் நிருபர்களை சந்தித்து தியாகு அளித்த பேட்டி வருமாறு, தி.மு.கவில்1984 இல் இணைந்தேன்.சட்டமன்ற நாடாளுமன்ற தேர்தல்கள், உள்ளாட்சித் தேர்தல்களில் தி.மு.க வேட்பாளர்கள் வெற்றிக்காக பம்பரமாய் சுற்றி பிரசாரம் செய்துள்ளேன். ஆனால் என் உழைப்புக்கு இன்றுவரை எந்த வித அங்கீகாரமும் அளிக்கப்படவில்லை. எனக்கு பின்னால் வந்தவர்களுக்கெல்லாம் பதவி கொடுக்கப்பட்டு உள்ளது. கட்சியில் இல்லாமல் துதிபாடியும் பலர் பயன் அடைந்துள்ளனர். ஆனால் நான் ஆரம்பத்தில் இருந்தே அதே நிலையில் தான் இருக்கிறேன். இது எனக்கு மனவேதனையை அளித்த காரணத்தால் தி.மு.க வில் இருந்து விலக முடிவு செய்தேன்.

நான் 33 ஆண்டுகளாக நடிகனாக இருக்கிறேன். என் சொந்த முயற்சியால் சினிமாவில் பெயரும் புகழும் சம்பாதித்தேன். நான் சாதாரண குடும்பத்தில் இருந்து வரவில்லை. எனது தாத்தா சங்கீத கலாநிதி இசைப் பேரறிஞர் கும்பகோணம் வயலின் ராஜமாணிக்கம் பிள்ளை ஆவார். எங்கள் வீட்டுக்கு தாத்தாவை பார்க்க பெருந்தலைவர் காமராஜர், முன்னாள் ஜனாதிபதி ஆர்.வெங்கட்ராமன், மூப்பனார் போன்றோரெல்லாம் வந்துள்ளனர். அப்படிப்பட்ட நான் கருணாநிதியின் வசனத்திலும் பேச்சிலும் ஈர்க்கப்பட்டு தி.மு.க.வில் இணைந்தேன்.

சினிமாவில் இருந்து தி.மு.க.வுக்கு வந்த எம்.ஜி ஆர்,சிவாஜி, எஸ்.எஸ் ராஜேந்திரன் என எல்லோரும் மனம் காயப்பட்டுத்தான் வெளியே சென்றார்கள். சமீபத்தில் வந்த வடிவேலுவும் படங்களும் இன்றி நடுத் தெருவில் நிற்கிறார். அ.தி.மு.க விலோ ராதாரவி எம்.எல்.ஏ.ஆனால் ராமராஜன் எம்.பி ஆக்கப்பட்டார். ஜசரிவேலனுக்கு மந்திரி பதவி கிடைத்தது. இன்று சி.ஆர். சரஸ்வதி வாரிய தலைவராக இருக்கிறார். திருச்சி சவுந்தரராஜன் அமைச்சரானார். அந்த கட்சியில் சினிமா காரர்களுக்கு மரியாதை அளிக்கப்படுகிறது என்றார். (4-2)

## பாரதச் செய்திகள்



# போட்டிக்கு நடைபெறும் உண்ணாவிரதம்;

## பொலிஸார் தடியடிப்பிரயோகம்

(திருச்சி)



திருச்சி மாவட்ட காங்கிரஸ் சார்பில் ராஜீவ்காந்தி கொலையாளிகள் 3 பேருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை உடனே நிறைவேற்றக்கோரி உண்ணாவிரதப் போராட்டம் நேற்று நடைபெற்றது.


அதன்படி நேற்று காங்கிரஸார் திருச்சி சத்திரம் பஸ்நிலையம் அண்ணாசிலை அருகே உண்ணாவிரதம் இருப்பதற்காக சத்திரம் பஸ்நிலையப் பகுதிக்குத் திரண்டு சென்றனர்.

பின்னர் அவர்கள் காமராஜர் சிலையை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். இதனால் பொலிஸாருக்கும் விடுதலைச் சிறுத்தை, புதிய தமிழகம் கட்சியினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

ஆவேசமடைந்த விடுதலை சிறுத்தை கட்சியினர் நடுவீதியில் அமர்ந்து மறியல் செய்தனர். இதனால் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டது. தகவல் அறிந்ததும் கூடுதல் பொலிஸார் அங்கு வரவழைக்கப்பட்டனர். மறியல் செய்த விடுதலை சிறுத்தைக் கட்சியினர், புதிய தமிழகம், நாம் தமிழர் கட்சியினர், பெரியார் திராவிடர் கழகம் நிர்வாகிகள் ஏராளமானோரை பொலிஸார் கைது செய்தனர்.

கைதானவர்கள் அனைவரும் பொலிஸ் வானில் ஏற்றிச் செல்லப்பட்டனர். இந்த வான் காங்கிரஸார் உண்ணாவிரதம் இருந்த பகுதி வழியாகச் சென்றது. அப்போது வானில் இருந்த விடுதலைச் சிறுத்தை கட்சியினர், காங்கிரஸ் கட்சியினரை பார்த்துக் கோஷமிட்டனர்.

இதில் ஆத்திரமடைந்த காங்கிரஸார் பொலிஸ் வான் மீது சரமாரியாகக் கற்களை வீசினர். இதனால் பொலிஸ் வான் கண்ணாடி உடைந்தது. இந்தச் சம்பவத்தில் அங்கு கூடி நின்றவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். தொடர்ந்து அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.ஏராளமான பொலிஸார் சம்பவ இடத்தில் குவிக்கப்பட்டனர்.(4-2)



தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தலைமைச் செயலகத்தில் கூடங்குளம் அணு மின் திட்டம் தொடர்பாக கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் மதுரை மாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் சந்தித்ததைப் படத்தில் காணலாம்

# கோப்பாய் கோமானின் நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னிய சிங்கம் நூற்றாண்டு விழாவும் நினைவுப் பேருரையும் **சாணக்கியன் நூல்** வெளியீடும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி மகளிர் கிராம அபிவிருத்திசங்க மண்டபத்தில் வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினரும் விழாச் சபை உறுப்பினரு மான அ.க.த.கிருஷ்ணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் **கோப்பாய் கோமான் வன்னிய சிங்கமும் தமிழ்த் தேசியமும்** எனும் விடயம் பற்றி இலங்கைத் தமிழரசு கட்சி மூத்த உப தலைவர் பேராசிரியர் சி.க.சிற் றம்பலம் நினைவுப் பேருரையை நிகழ்த்த வுள்ளார்.

அத்தோடு சாணக்கியன் நூல் வெளி யீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலா சாலை விரிவுரையாளர் ச.லலீசன் நிகழ்த்த இல ங்கைத்தமிழரசுக்கட்சியின் உப தலைவர் க.சின் னத்துரை வெளியிட்டு வைக்கவுள்ளார்.

அத்தோடு இந்நூலின் முதற்பிரதியை இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொருளா ளர் சி.தியாகராசா பெற்றுக் கொள்ளவுள் ளார்.

இதில் நினைவுரைகளை திருமலையின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துரை ரட்ணசிங்கம், மானிப்பாய் கிளையின் இலங் கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளரும் ஆசிரியருமான பா.கஜதீபன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (4-12)




# யா/புத்தூர் மடிகே பஞ்ஞசீத வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்


## ஆளுநர் வழங்கினார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.புத்தூர் மடிகே பஞ்ஞசீத வித்தி யாலயத்திற்கு வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசறி நேற்றையதினம் விஜய மொன்றை மேற்கொண்டுள்ளார்.

அதன்போது அங்குள்ள மாண வர்களின் கல்வி செயற்பாடு பற்றி அறிந்து கொண்டுடன் அங்குள்ள பாடசாலையின் பௌதீகவளங்களைச் சுற்றிப் பார்வையிட்டு பின் அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரை யாடல் ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.

இக்கலந்துரையாடலின் போது பாட சாலை அதிபர் இப்பாடசாலையில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மாணவர்கள் கல்வி கற்பதாகவும் தளபாடங்கள், கணனிகள் என்பன தேவைப்படுவதாகவும் கூறினார்.



இதற்கமைய அதனை உடனே நிவர்த்தி செய்வதாக கூறிய ஆளுநர் அப்பாடசாலை மாணவர்கள் காலணிகள் இல்லாது வரு வதையும் அவதானித்து அன்றைய தினமே மாணவர்களுக்கு காலணிகள், பாடசாலை தளபாடங்கள், கணனிகள் என்பன கொள் வனவு செய்து பாடசாலை அதிபரிடம் கைய ளித்துள்ளார். (4-12)

# இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள்-ஆட்டோ நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இளை ஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் நேற்றுமுன் தினம் பிற்பகல் 2.45 மணியள வில் சாவகச் சேரி பெருங்குளம் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த சாவகச்சேரி சரசாலைப் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணாசாமி கிருஷ்ணமேனன் (வயது-21) என்ற இளைஞனே கால் முறிவடைந்த தோடு படுகாயமடைந்தார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6)

# சீரான நேர வரையறையுடன் பேருந்துகள் பயணிக்க வேண்டும்

## பொதுமக்கள் கோரிக்கை

வடமராட்சி கிழக்குப் பகுதியில் போக்குவரத் தில் ஈடுபடும்தனியார் மற்றும் அரச பேருந்துக ளின் சேவை மக்களுக்கு முற்றுமுழுதாக கிடைப்பதில்லை என அப்பகுதி மக்கள் தெரி விக்கின்றனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து வடமராட்சி கிழக் கின் கேவில் வரைக்கும் பயணத்தில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பேருந்துகளின் நேர வரையறைகள் சீராக இடம்பெறுவதில்லை எனத் தெரிவிக்கின்றனர். அதிகாலையிலிரு ந்து புறப்படும் பேருந்துகள் பயணிகளை ஏற்றுவதற்காக போட்டி அடிப்படையிலேயே பயணிக்கின்றன.

இதனால் பேருந்துகளை நம்பி பயணம் மேற்கொள்ள வரும் மக்கள் ஏமாற்றமடைவ துடன் பல மணி நேரம் காத்து நிற்பதாகவும் தெரி விக்கின்றனர். இதேபோன்றே வடமராட்சி கிழக் கில் கேவில் பகுதியிலிருந்து மருதங்கேணி நாகர் கோவிலூடாக பருத்தித்துறை வரை செல்லும் பேருந்துகளிலும் இவ்வாறான பிரச்சினை ஏற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத் திற் கொண்டு நேர வரையறைகளை திட்ட மிட்டு பேருந்துகளை நம்பி போக்குவரத்தில் ஈடுபடும் மக்களுக்கு சீரான பேருந்துப் போக் குவரத்தை ஏற்படுத்தித் தருமாறு மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (4-12-64)

# விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினால் முன் பள்ளி சான்றிதழ் கற்கை நெறிக்கான விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் சாதாரண தரத்தில் கணிதம் மற் றும் தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி களை உடையோர் இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை நாளை சனிக் கிழமை வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத் தில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித் துள்ளார்.

* * * * * *

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினால் தொழிலுரி மைத்துவமும் சிறு வணிக முகாமைத்து வமும் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் சாதாரண தரத்தில் 6 பாடங் களில் சித்திகளை உடையோர் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

எனவே விண்ணப்பப்படிவங்களை நாளை சனிக்கிழமை வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந் திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

* * * * * *

(யாழ்ப்பாணம்)

இலங்கைதிறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினால் சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறி, இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா, சமூக விஞ்ஞானத்தில் கலைமாணிப் பட்டக் கற்கை நெறி MA in Development Studies and Public Policy ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே, விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந் துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற் றுக் கொள்ளலாம் எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இக் கற்கை நெறிகள் யாவும் யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என யாழ். பிராந்திய நிலைய இணைப் பாளர் தெரிவித்துள்ளார். (4-12)

# யாழ்ப்பாண கோட்டமட்ட விரைவு கணிதத்திறன் போட்டி முடிவுகள்-2011

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்ட மட்ட பாடசாலை களுக்கிடையில் நடைபெற்ற விரைவு கணி தத் திறன் போட்டி-2011 போட்டி முடிவுகள் யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய முதல் 10 இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வரு மாறு,

**தரம்-02**

நி.அபினேஸ் (யா/சென்.ஜோன் பொஸ்கோ வித்தி), வை.அபிஷ்கிளைன் (யா/சென்பற் றிக்ஸ் கல்லூரி), ச.கிசோபன்(யா/கொழும்புத் துறை இந்து.ம.வி), பி.சஜீவன்( யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), தே.அனட்தர்சிகா (யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்), ஜெ.கனுஜன் (யா/நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தி), ர.கவிசனா (யா/சென்மேரிஸ் வித்தி), ர.பிர ணவன் (யா/கொட்டடி நமசிவாய வித்தி), கி.அனுஷா ( யா/பாசையூர் சென். அன்ர னிஸ் பெண்கள் பாடசாலை), அ.சௌறினா (யா/சுண்டுக்குழி மகளிர் கல்லூரி)

**தரம்-03**

பே.யுதீஸ்ரன் (யா/சென்.ஜோன் பொஸ்கோ வித்தி), ஜெ.டினோஜன் (யா/மத்திய கல்லூரி), ம.அன்றுபேசினி (யா/சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), ர.கனுஷா (யா/திருக்குடும்ப கன்னி யர்மடம்), அ.மேரிரோசீனா (யா/கொழும்புத் துறை இந்து ம.வி), து.மதியாஷரணி ( யா/ பாசையூர் சென். அன்ரனிஸ் பெண்கள் பாடசாலை), இ.அனுசியா (யா/சன்மார்க்க வித்தி), சி.விசுதாரன் (யா/வண்ணை நாவலர் ம.வித்தி), ர.சாளிகா (யா/சென்ஜேம்ஸ் பெண் கள் பாடசாலை), சு.கவிசாந்த் (யா/சென்பற் றிக்ஸ் கல்லூரி)

**தரம்-04**

சி.சிவமதுரன் (யா/சென்.ஜோன் பொஸ்கோ வித்தி), சு.கிருஷன் ( யா/கொழும்புத்துறை இந்து.ம.வி), இ.லக்ஷனா (யா/சன்மார்க்க வித்தி), சு.ஜதுஷிகா (யா/சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), ச.ஸ்ராலின் (யா/மத்திய கல்லூரி), யூ. மேரிடினிஷியா (யா/சென்ஜேம்ஸ் பெண் கள் பாடசாலை), பொ.ஜொய்சன் (யா/கொட் டடி நமசிவாய வித்தி), ஏ.தவசுதன் (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), ச.நிதுஷிகா (யா/திருக் குடும்ப கன்னியர்மடம்), இ.டிசாந் (யா/கொழும் புத்துறை துரையப்பா வித்தி),

**தரம்-05**

சி.கிசோர் (யா/சென்.ஜோன் பொஸ்கோ வித்தி), பி.துர்ஷா (யா/ கொழும்புத்துறை இந்து ம.வி), சி.நிரோஷனா (யா/வண்ணை நாவலர் ம.வித்தி), அ.டனுஜன்(யா/சென்சாள்ஸ் மகா வித்தி), டெ.ராஜ்குமார் (யா/திருக்குடும்ப கன் னியர்மடம்), ம.ஜனுகா (யா/சுண்டுக்குழி மக ளிர் கல்லூரி), சு.யசோதரன் (யா/மத்திய கல்லூரி), நி.எழில்ஓவியா (யா/சென்மேரீஸ் வித்தி), அ.மரியபேட்சிகா (யா/நாவாந்துறை ஆர்.சி.வித்தி), இ.டிலக்சனா (யா/கொழும் புத்துறை துரையப்பா வித்தி)

(4-12)





இலங்கை வங்கி கோப்பாய் அலுவலகம் கிளையாக தரமுயர்த்தப்பட்ட நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் முதல் வைப்பு செய்த வாடிக்கையாளர் ஒருவருக்கு அன்பளிப்பு பொருள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

திருப்பெருந்துறையுறை சிவனே!
யாரோடு நோவோம்; யார்க்கெடுத்துரைப் போம்
ஆண்ட நீ அருளிலையாகியின்... -மணிவாசகர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## புல்லாகிப்... பூடாகி... பூதமாகி... மர்ம மனிதனாகி... எல்லாத் துன்பமும்

எங்கள் துன்பத்தை யாரிடம் எடுத்துரைப்பது! ஆண்டவனிடம் சொல்லி முறையிடலாம் என்றால் அவனுக்கும் எத்தனையோ இடைஞ்சல்.

இப்போது தன் இருப்பிடத்தைக் காப்பாற்றிக் கொள்ள அவன் படாப்பாடுபடுகின்றான்.

இந்த நிலையில் அவரைத் தொந்தரவுப்படுத்தவும் விருப்பம் இல்லாமல் தமிழ்மக்கள் தங்கள் வேதனையை சொல்லவும் மெல்லவும் முடியாமல் தவிக்கின்றனர்.

மலையகத்தில் ஆரம்பித்த கிறீஸ்பூத நாடகம் யாழ்ப்பாணத்திலும் மேடையேறியது. கிறீஸ் பூதம் மர்மமனிதனாகி அதன் தொந்தரவுகள், துன்பங்களை தாங்கிக் களைத்து ஏதோ சற்று ஓய்வு ஏற்பட்டிருப்பதுபோல நினைக்க,

களவுப் பிரச்சினை ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் வாழ்வு வெறுத்துப் போய் விடுகின்றது.

நிம்மதியாக உறங்க முடியாத நிலைமை. இராணுவம், பொலிஸ் என படைத்தரப்பு வடபுலம் முழுவதையும் ஆக்கிரமித்திருக்கும்போது, யாழ்ப்பாணக் குடாநாட்டை களவுப்பிரச்சினை மீண்டும் கதி கலங்க வைத்துள்ளது.

திருவாசகம் தந்த மணிவாசகர் பிறப்பின் பெருந்துன்பத்தை சிவபுராணத்தில் அழகாக குறிப்பிட்டார். பரம் பொருளின் மெய்யடிகளைக் கண்டு உய்வு பெறாததன் காரணமாக புல்லாகி, பூடாய், புழுவாய், மரமாகி பல்மிருகமாகி, பறவையாய், பாம்பாகி, கல்லாய், மனிதராய், பேயாய், கணங்களாய், வல்ல அசுரராகி, முனிவராய், தேவராய் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் என்று தன் துன்பத்தை கூறி ஆற்றுப்படுகின்றார்.


மணிவாசகர் தன் பிறவிப்பிணி தொடர்பில் சிவபுராணம் பாடினாராயின், நாம் எங்கள் அவல வாழ்வு குறித்து புராணம் பாடினால், புல்லாகி... பூடாகி... பூதமாகி... மர்ம மனிதராகி... கல்லெறியும் வன்நெஞ்சராகி... கள்ளராகி... கடத்தல்காரராகி... எல்லாத் துன்பமும் இழைத்து எங்கள் நிம்மதி குலைத்தாய். யார் உய்விப்பார் என்றறியாமல் அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா நோர்வே உதவும் என்று நோன்பிருந்து; இங்கு வருகின்ற பிளேக், அசோக் கே காந் அனைவருக்கும் மந்திரம் உச்சரித்து மன்றாடி நின்றாலும் ஐ.நா.சபை அருளாமல் இருப்பதும் முறையோ என்று உரைத்தால் எங்கள் துன்பம் போகுமோ?

பேசாமல் இருந்தால் பிழையில்லை என்றிராமல், எங்களுக்காய் உரைத்துப் பேசுவார் உளரேல் அவர் எல்லாம் ஒன்றிணைந்து மகா யாகம் நடத்தி, உண்ணா நோன்பிருந்து ஐ.நாவே! உயிர் துறப்போம் என்றால் ஐ.நா. அருள்வான்.

கடவுளே! முக்கால வேளையும் வெளி ஊரில் என்றால் மந்திரம் சொல்வது யார்? மகா யாகம் செய்வது யார்? நோன்பிருந்து ஆநெய் விட்டு அக்கினிப் பிழம்பேற்றி, யார் எரிக்கும் வேள்வித் தீ இது என்று வையகம் வியக்கச் செய்வதுயார்?

நாங்கள் பாடுவோம் புராணம். விரும்பினால் பரமசிவன் உதவட்டும்.

## திருகோணமலைக்கு விஜயம் செய்து குறைகளைக் கேட்டறிந்தார்- டக்ளஸ்



யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று அதிகாலை திருமலைக்கு விஜயம் செய்திருந்த பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மக்கள் குடியிருப்பு பகுதிகள் சிலவற்றுக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இதன் பிரகாரம் 680 குடும்பங்கள் வசிக்கும் ஆனந்தபுரி, 260 குடும்பங்கள் வசிக்கும் நித்தியபுரி, 275 குடும்பங்கள் வசிக்கும் தேவாநகர், 140 குடும்பங்கள் வசிக்கும் வரோதயநகர், புதுக்குடியிருப்பு போன்ற மக்கள் குடியிருப்புக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களின் தேவைகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது மக்களுடைய காணி உறுதிகள், அடிப்படை பிரச்சினைகளான குடிநீர் வசதி, வாய்க்கால் புனரமைப்பு, பாதைகள் புனரமைப்பு, சுகாதார வசதிகள்போன்ற பல்வேறு தேவைகள் குறித்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இவ் அனைத்து கோரிக்கைகளையும் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் இன்னும் சில மாதங்களுக்குள் இக் கோரிக்கைகளை அனைத்தும் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று அவர்களுக்கு உறுதியளித்தார்.

தேவாநகருக்கு ஏற்கெனவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் 48 இலட்சம் ரூபாய் ஒதுக்கி அம் மக்களுக்கான சுயதொழில் வாய்ப்புக்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் இக் குடியேற்றங்கள் யாவும் அமைச்சர் அவர்களால் ஏற்கெனவே வழங்கப்பட்ட காணிகளில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-2)

## இலவச மருத்துவ முகாம்

மானிப்பாய் பரிஷ் லியோக் கழகம், லயன்ஸ் கழகத்துடன் இணைந்து எதிர்வரும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 2 மணி வரை மாபெரும் இலவச மருத்துவ முகாமினை பண்டத்தரிப்பு பட்டினசபை கட்டிடத்தொகுதியில் நடத்தவுள்ளது.

இம் முகாமில் கண் பரிசோதித்து மூக்குக் கண்ணாடி இலவசமாக வழங்கப் படுவதுடன் யாழ்ப்பாணத்தின் பிரபல வைத்தியர்களால் பொது மற்றும் ஆயுள்வேத சிகிச்சையும் மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன. (4-2)


## பாடசாலையின் பெயர் மாற்றம்

(புன்னாலைக்கட்டுவன்)

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் யாழ்.புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை கடந்த 6 ஆம் மாதம் யா/புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு இப்பாடசாலையின் முன்னாள் உப அதிபர் அமரர் க.சோமசுந்தரம் நினைவாக லண்டனிலுள்ள அவரது மகன் சோ.கணேஸ்வரன் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பெறுமதியான பெயர்வளைவினை அன்பளிப்புச் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-12)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



### நவக்கிரகங்களை வணங்குவதால் கிடைக்கும் பலன்கள்

நவக்கிரகங்களை வணங்குவதால் பல்வேறு பலன்கள் கிடைப்பதாக் கூறப்படுகிறது.

⇦ சூரியன்- கண்நலம், உடல்நலம், ஆயுள் விருத்தி.

⇦ சந்திரன்-இனிமை, மகிழ்ச்சி, அழகு, ஆனந்தம், நல்லமனம்.

⇦ செவ்வாய்-தைரியம், பேச்சாற்றல், தோள் வலிமை, வழக்குகளில் வெற்றி.

⇦ புதன்-அறிவு, அறிவு வளர்ச்சி.

⇦ குரு (வியாழன்)-நல்ல குழந்தைகள், நல்வாழ்க்கை,நல்ல புத்தி, புகழ், கௌரவம்.

⇦ சுக்கிரன்-நல்ல மனைவி, லட்சுமி கடாட்சம், கீர்த்தி,

⇦ சனி-இடையறாத பூஜைகள் செய்தால் நோய்கள், தரித்திரம், சிரமங்கள் வராமல் இருக்கும்.

⇦ ராகு-நரம்பு பலவீனம் மற்றும் நோய் இல்லா நிலையை ஏற்படுத்தித் தரும்.

⇦ கேது-நல்ல தானம், முக்தி, வெற்றி பெறுதல்.

## சாவகச்சேரி இந்துக்கு புதிய பேருந்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அதன் ஸ்தாபக குடும்பத்தினரால் பாடசாலையின் பாவனைக்கென வழங்கப்படவுள்ள பேருந்து ஒன்று கையளிக்கும் நிகழ்வு இன்று காலை 8 மணிக்கு கல்லூரி வளாகத்தில் கல்லூரி அதிபர் அ.கைலாசபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. (4-12,29)

## வெள்ளி நற்சிந்தனை







38

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

இறைவன் பெருமையையும் அருளையும் எல்லோரும் அறியப் பாடியவர்களில் மணிவாசகர் வேறுபட்டவர். இறைவனைப்பற்றி அவர் உணர்வதற்கான உண்மையனுபவத்தைப் பெற்றவர். அதனால் சிவனைப் பற்றி அவர் பாடிய பாடல்கள் பக்தியனுபவம் பற்றியவை மெய்யன்பரல்லாத நான்முகன் முதலிய பிறர் எவரும் அணுகி நின்று இறைவன் இத்தன்மையான குணங்களுடையவன் என்று கூறமுடியாதவர்கள். ஆனால், மணிவாசகர் சிவனை இத்தன்மையன் என்று கூறக்கூடியவர்.

சிவன் பசுவின் நெய்போன்றவன். நெய்யின் சுவையை அதனை உண்டவரே அறிவர். இறைவன் செய்யால் நீராடுபவன். கருப்பஞ்சாறு மிக இன்மையானது. அந்தச் சாற்றின் இனிய தெளிவு போன்றவன். சிவனென்னும் சிறப்பான நாமத்தை உடையவன்.செம்மையும் வனப்புமுடையவன். என்னையாளும் சிவலோக நாதன் என மணிவாசகர் குறிப்பிடுகின்றார். சிவனுடைய சிறப்பான இன்னொரு நிலையையும் எடுத்துக் கூறியுள்ளார். மான்போன்ற பார்வையுடைய உமையம்மையைத் தனது இடப்பாகத்திலே கொண்ட அர்த்தநாரீஸ் வரவடிவம் தனித்துவமானது. இத்தகைய சிறப்புடைய சிவனை வழிபடாமல் நீண்ட காலமாக எனது உடம்பை ஓம்பிக் கொண்டிருந்தேனே. உலகில் நீண்ட காலம் வாழவேண்டும் என்பதற்காக ஊனுடம்பைப் பாதுகாக்கும் தொழிலைச் செய்திருந்ததை மணிவாசகர் மறக்கவில்லை. எனவே, மீண்டும் இறைவனை அடையப்பணி செய்கிறார். மணிவாசகர் கூறும் சிவனின் சிறப்புப் பற்றிச் சிவ சிவ வெண்பாவும் சில செய்திகளைக் கூறியுள்ளது. சிவன் என்பது இறைவனும் இறைவியும் ஒன்றுபட்டிருக்கும் நிலையைக்குறிப்பது. சிவன் என்னும் திருநாமம் எங்கள் இறைவனுக்கே அன்றிப் பிறர் எவருக்குமே இல்லாதது. இத்திருநாமத்தினை இடைவிடாது நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் தியானிப்பவர்களுக்கு அருள் செய்வதற்கு இறைவன் இறைவியோடு பின்தொடர்ந்து திரிவான் என உரையாசிரியர் விளக்கந்தருவர்.

இவ்வாறு அடியார்க்கு அருள் செய்யும் சிவனைத்தான் நெருங்காமல் நீண்டகாலம் பிரிந்திருந்ததை மணிவாசகர்பாடல்களிலேபதிவுசெய்துள்ளார். குறுகிலேன் நெடுங்காலம் என்று பாடலில் அவர் குறிப்பிடும் போது தான் இறைவனைப் பிரிந்திருந்த நாட்களை மிக நீண்ட காலமாக உணர்ந்ததைக் குறிப்பிடுகிறார். அவருடைய மனத்திலே இறைவனைப் பிரிந்திருத்தல் என்பது வழிபாட்டு நடைமுறைகளை செய்யாதிருந்ததையே சுட்டுகிறது. மந்திரியாகக் குதிரை வாங்க வந்த மணிவாசகர் திருவாதவூரடிகளாக சிவபக்தனாக மாறினார். சிவனடிக்கீழிருந்து உபதேசம் பெறும் பேறுபெற்றார். ஆனால், சிவன் அவரைப் பிரிந்ததும் எல்லாவற்றையும் மறந்து விட்டார். இது அவரைப் பெரிதும் பாதித்தது. உடம்பு பற்றிய

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

நினைப்போடு பலகாலம் இருந்ததை எண்ணிக்கவலைப்படுகிறார். கெடுவேன் உயிர் ஓவாதே என்ற பாடலின் தொடர் இறைவன்அருளால்ஆணவல்லிருளின் ஆற்றலும் சஞ்சித ஆகாமிய வினைகளும் ஒழியப் பெற்றிருந்தும் பிரார்த்த வினை உண்மையாலும் ஒழிந்த ஆணவகன்மங்களின் வாதனையுண்மையாலும் என் உயிர் தப்பாது என அவர் அஞ்சியதாக உரையாளர் கூறுவர்.

ஏனையாவரு மெய்திட லூற்று
மற்றின்னதென் றறியாத
தேனை ஆனெய்யைக் கரும் பின்
தேறலைச் சிவனையென் சிவலோகக்
கோனை மானைநோக்கிதன் கூற னை
குறுகிலேன் நெடுங்காலம்
ஊனை யானிருந் தோம்புகின்
றேன் கெடுவே னுயிர் ஓயாதே

# ஆப்கான் அதிபர் கொலைக்கு தலிபான்கள் பொறுப்பேற்பு

(ஆப்கான்)

**தற்கொலை தாக்குதலில் கொல்லப்பட்ட ஆப்கான் முன்னாள் ஜனாதிபதி பர்ஹனுதீன் ரப்பானியின் உடலுக்கு அஞ்சலி செலுத்த நேற்று முன்தினம் நூற்றுக்கணக்கான மக்கள் குவிந்தனர். இந்நிலையில் அவர் மீது தற்கொலை தாக்குதல் நடந்தது எப்படி என்பது பற்றி விபரங்கள் வெளியாகியுள்ளன.**

**தலிபான் அமைப்பு இந்த கொலைக்கு பொறுப்பேற்றுள்ளது.**

இத்தாக்குதலோடு தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஆப்கானிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதியும் தலிபான்களுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தி வந்தவருமான பர்ஹனுதீன் ரப்பானி (வயது-71) தலைநகர் காபூலில் உள்ள பாதுகாப்பு மிகுந்த அவரது வீட்டில் கடந்த 20 ஆம் திகதி இரவு நிகழ்ந்த தற்கொலை தாக்குதலில் கொல்லப்பட்டார்.

அவர் மீதான தாக்குதல் குறித்த விபரங்களை ரப்பானியின் உதவியாளரும் ஆப்கான் அமைதிக் குழுவின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகருமான முகமது இஸ்மாயில் காசீமியார் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் கூறியதாவது,

தலிபான்களின் ஊடுருவல் திட்டங்களுக்கு முக்கிய கர்த்தாவான இஸ்மத்துல்லா என்பவர் ரப்பானியுடன் நேரடியாகப் பேச வேண்டும் எனத் தெரிவித்தார். அச் சமயம் ரப்பானி ஈரானுக்குச் சென்றிருந்தார்.

அவர் வரும் வரை அமைதிக்குழுவில் அலுவலக வளாகத்தில் விருந்தினர்கள் தங்கும் வீட்டில் இஸ்மத்துல்லா தங்கியிருந்தார். ஈரானில் இருந்து ரப்பானி திரும்பியவுடன் கடந்த 20 ஆம் திகதி அவரை இஸ்லாமத்துல்லாவும் மற்றொருவரும் நேரில் சந்தித்தனர்.

அவர்கள் இருவரில் ஒருவர் ரப்பானியின் அருகில் சென்று வணக்கம் செலுத்துவதற்காக குனிந்தார். அப்போது தனது தலைப் பாகையில் மறைத்து வைத்திருந்த வெடி குண்டை இயக்கினார். அந்தத் தாக்குதலில் தான் ரப்பானி பலியானார் என தெரிவித்தார்.

காபூலின் பல இடங்களில் ரப்பானி கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தன. இந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்ட மக்கள் ரப்பானியின் படங்களை ஏந்தியிருந்தனர்.

இந்தியா, அமெரிக்கா, சீனா உள்ளிட்ட நாடுகள் ரப்பானியின் கொலைக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இத்தாக்குதலோடு தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ரப்பானி கொலைக்குப் பொறுப்பேற்றுள்ள தலிபான் அமைப்பு நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

இந்தக் கொலைக்காக இருவர் நியமிக்கப்பட்டனர். அவர்கள் இருவருமே ரப்பானியின் நம்பிக்கைக்கு பாத்திரமாவதற்காக நீண்ட காலம் அவருடன் பழகினர்.



அவர்கள் தலிபான் அமைப்பின் தலைவரை ரப்பானியுடன் விரைவில் பேச்சுவார்த்தையில் ஈடுபடச் செய்வதாக நம்பிக்கை ஊட்டியிருந்தனர். இந்த பேச்சுவார்த்தை என்ற மாய வலையில் சிக்கித் தான் ரப்பானி பலியாகியுள்ளார். இதுபோன்று எதிர்காலத்தில் பல்வேறு தாக்குதல்களை நடத்துவோம் என எச்சரித்துள்ளனர். (4-2)

# கப்பல் மூழ்கியதில் 11 பேர் உயிரிழப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் தீவு ஒன்றுக்கு பயணமான கப்பல் நீரில் மூழ்கியதில் 11 பேர் உயிரிழந்தனர்.

இது தொடர்பாக பாலி தீவின் மீட்புக் குழுவின் தலைவர் ஐ.கேடுட் பார்வா கூறியது,

இந்தோனேசியாவின் நூஸஎலெம்போங்கன் தீவிலிருந்து 36 பயணிகள் மற்றும் ஊழியர்களுடன் நூஸபொனிடா தீவைச் நோக்கிச் சென்ற கப்பல் கடந்த செவ்வாய்க் கிழமை நீரில் மூழ்கியது.

இதில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். 14 பேரை காணவில்லை. 11 பேர் உயிர் தப்பினர் என்றார்.

17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தீவுக் கூட்டங்கள் உள்ள இந்தோனேசிய நாட்டில் இதுபோன்ற விபத்துக்கள் அடிக்கடி நிகழ்ந்து வருகின்றன.

கடந்த ஜனவரியில் சூலாவெசி தீவு அருகே படகு மூழ்கியதில் 335 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-2)




# தீவிரவாதிகளுக்கு உதவுவதை பாகிஸ்தான் நிறுத்தவேண்டும்

## அமெரிக்கா எச்சரிக்கை

தீவிரவாதிகள் இணையத்தளத்துடன் தொடர்பு வைத்து மறைமுக போரில் ஈடுபடுவதை பாகிஸ்தானில் ஐ.எஸ்.ஐ. நிறுத்த அமெரிக்கா கெடு விதித்துள்ளது.

பாகிஸ்தானில் தீவிரவாத அமைப்புகளின் பயிற்சிக்கு அந்நாட்டு உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. உதவுவதாக ஆதாரங்களை அமெரிக்கா திரட்டியுள்ளது. இது பற்றி இந்தியா நீண்ட காலமாக புகார் தெரிவித்து வருகின்றது.

இந்நிலையில் தீவிரவாதிகள் மீது போர் தொடுப்பதாக வெளியே காட்டிக் கொண்டு மறைமுகமாக தீவிரவாத அமைப்புகளுக்கு உதவுவதை ஐ.எஸ்.ஐ. உடனடியாக நிறுத்த அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இது பற்றி பாகிஸ்தான் அரசுக்கு தகவல்களை ஒபாமா அரசு அனுப்பியுள்ளதாக தி வோஷிங்டன் போஸ்ட் நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

அதன்படி தீவிரவாதிகளுடன் தொடர்பை ஐ.எஸ்.ஐ. கைவிட்டு சர்வதேச தீவிரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்காவுடன் ஒத்துழைக்க வேண்டும்.

தவறினால் பாகிஸ்தான் செயற்படும் தீவிரவாத முகாம்கள் மீது தன்னிச்சையாக அமெரிக்கா தாக்குதல் நடத்தும் நிலை ஏற்படும் என்று அதில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஐ.எஸ்.ஐ.யின் நடவடிக்கையில் மாற்றம் ஏற்படுத்துவதில் அமெரிக்க இராணுவம் அமைச்சர் லியோன் பனெட்டா மற்றும் அதிகாரிகள் உறுதியாக இருப்பதாகவும் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (4-2)

# புகுஷிமா அணு உலையை பயங்கர புயல் தாக்கியது

## 6 பேர் பலி; சொத்துக்கள் நாசம்

ஜப்பானில் புகுஷிமா நகரில் கடந்த மார்ச் மாதம் 11 ஆம் திகதி சுனாமி தாக்கியது. இதில் அங்குள்ள அணு உலை பாதிக்கப்பட்டு அணு கதிர்வீச்சு ஏற்பட்டது. இதில் பலர் உயிர் இழந்தனர். இதையடுத்து அந்த அணு உலை மூடப்பட்டது.

இந்த நிலையில் புகுஷிமா அணு உலையை நேற்று முன்தினம் பயங்கர புயல் தாக்கியது.

மணிக்கு 180 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய சூறாவளி காற்றுடன் இராட்சத கடல் அலைகள் அணு உலையை தாக்கின.

ஆனாலும் அணுஉலை சேதம் அடையவில்லை. அணு கசிவுக்கும் வாய்ப்பு இல்லை என்று அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

புயல் தாக்குதலுக்கு 6 பேர் பலியானார்கள். புயல் தாக்குவது பற்றி முன்கூட்டியே தெரிந்துவிட்டதால் அந்த பகுதியில் வசித்து வந்த 10 இலட்சம் மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு இருந்தனர்.

இதனால் அதிக அளவில் உயிரிழப்பு இல்லை. ஆனால் பல்லாயிரக்கணக்கான வீடுகள் புயலில் அடித்துச் செல்லப்பட்டன.

வீதிகளும் பலத்த சேதம் அடைந்தன. புயலால் விமானம், புகையிரதப் போக்குவரத்துக்கள் இரத்து செய்யப்பட்டன. ஜப்பானில் கடந்த மாதமும் புயல் தாக்கியது. அதில் 100 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது.(4-2)



ஜேர்மனிக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள துருக்கி ஜனாதிபதி அப்துல்லா குவ் (இடது) ஸ்டட்கிராட் நகர தலைவர் படேன் உர்ட்டெம்பர்க்குடன் பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

# உலகின் குள்ளமான பெண்ணாக அமெரிக்கப் பெண்மணி தெரிவு



அமெரிக்க கல்லூரியில் பயிலும் 27 இஞ்ச் உயரமுள்ள மாணவி பிரிட்ஜெட் ஜார்டன் உலகிலேயே மிகவும் குள்ளமான பெண் என்று கின்னஸ் உலக சாதனைக்குழு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்தவர் பிரிட்ஜெட் ஜார்டன் (வயது-22). அவரது சகோதரர் பிராட் ஜார்டன் (வயது-20) பிரிட்ஜெட்டின் உயரம் 27 இஞ்ச். பிராடின் உயரம் 38 இஞ்ச். அவர்கள் தான் உலகிலேயே மிகவும் குள்ளமான உடன்பிறப்புக்கள் என்று கின்னஸ் சாதனைக்குழு தெரிவித்துள்ளது.

அவர்கள் இருவரும் மத்திய இல்லினாய்சில் உள்ள கஸ்கசியா கல்லூரியில் படித்து வருகின்றனர். நாட்டியம், சியா லீடிங் ஆகியவை பிரிட்ஜெட்டின் பொழுதுபொக்கு. பிராட் , கராத்தே , ஜிம்னாஸ்டிக்ஸ், கூடைப்பந்து , மஜிக் செய்வதில் அதிக ஆர்வம் உள்ளவர். பிரிட்ஜெட் தான் உலகிலேயே குள்ளமானவர் பெண்மணி என்று கின்னஸ் உலக சாதனைக் குழு தெரிவித்துள்ளது. 28.5 இஞ்ச் உயரமான துருக்கியைச் சேர்ந்த எலிப் கோகமேன் தான் இதற்கு முன்பு உலகின் குள்ளமான பெண்மணியாக திகழ்ந்தார்.

இதுவரை வாழ்ந்தவர்களிலேயே குள்ளமான பெண் என்றால் அது நெதர்லாந்தைச் சேர்ந்த பாலின் மஸ்டர்ஸ் தான். அவர் உயரம் வெறும் 24 இன்ஞ். அவர் கடந்த 1895 ஆம் ஆண்டில் தனது 19 ஆவது வயதில் நிமோனியாவில் உயிரிழந்தார். (4-2)

# தகுதி சுற்று ஆட்டங்கள் முடிந்தன

# சம்பியன்ஸ் லீக் இன்று தொடக்கம்

CHAMPIONS LEAGUE TWENTY 20 INDIA

சம்பியன்ஸ் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியின் தகுதி சுற்று ஆட்டங்கள் நேற்று முன்தினம் முடிந்தன. நேற்று முன்தின ஆட்டத்தில் சோமர்செட் 11 ஓட்டங்களால் கொல்கத்தா நைட் ரைடர்ஸையும், றுகுணு அணி 4 ஓட்டங்களால் லீசெஸ்டர் சையர் அணியையும் தோற்கடித்தன.

தகுதி சுற்று முடிவில் சோமர்செட், டிரினிடாட் அணிகள் தாம் மோதிய 2 ஆட்டத்தில் வெற்றிபெற்றது. 4 புள்ளிகள் பெற்று முதன்மை சுற்றுக்கு தகுதி பெற்றன.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும், றுகுணு அணியும் தலா 2 புள்ளிகளுடன் சம நிலையில் இருந்தன.

நிகர ஓட்ட விகித அடிப்படையில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மூன்றாவது அணியாக தகுதிபெற்றது. அந்த அணியின் ஓட்ட விகிதம் -0.225 ஆகும். றுகுணு அணியின் ஓட்ட விகிதம் -0.275 ஆகும். றுகுணு மற்றும் ஒரு வெற்றி கூட பெறாத லீசெஸ்டர் சையர், ஆக்லாந்து ஆசஸ் ஆகிய மூன்று அணிகள் வெளியேற்றப்பட்டன.

சம்பியன்ஸ் லீக் இருபது-20 கிரிக்கெட் போட்டியில் முதன்மைச்சுற்று இன்று தொடங்குகிறது. ஒக்டோபர் 9ஆம் திகதிவரை இந்தப் போட்டி நடக்கிறது. இதில் ஐ.பி.எல். போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ், மும்பை இந்தியன்ஸ் உட்பட 7 அணிகள் நேரடியாக விளையாடுகின்றன.

தகுதிச் சுற்று மூலம் மூன்று அணிகள் முன்னேறின. இதில் விளையாடும் 10 அணிகளும் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு,

ஏ பிரிவு :- சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், நியூ சவுத் வேல்ஸ் புளூஸ் (அவுஸ்திரேலியா), கேப் கோப்ராஸ் (தென்னாபிரிக்கா), டிரினிடாட் மற்றும் டொபாக்கோ (மேற்கிந்தியத் தீவுகள்).

பி பிரிவு :- பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ், வாரியர்ஸ் (தென்னாபிரிக்கா), தெற்கு அவுஸ்திரேலியன் ரெட்பேக்ஸ் (அவுஸ்திரேலியா), சோமர் செட் (இங்கிலாந்து), கொல்கத்தா நைட் ரைடர்ஸ்.

ஒவ்வொரு பிரிவில் உள்ள அணிகளும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன்



கோல்கட்டா தகுதி பெற்ற மகிழ்ச்சியில் அதன் உரிமையாளரும் நடிகருமான ஷாருக் கான்.

தலா ஒரு முறை மோதவேண்டும். லீக் முடிவில் புள்ளிகள் அடிப்படையில் இரண்டுப் பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெறும்.

ஒக்டோபர் 7ஆம் திகதி முதல் அரையிறுதி பெங்களூரிலும், 8ஆம் திகதி இரண்டாவது அறையிறுதி சென்னையிலும் நடைபெறுகிறது.

இறுதிப் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் 9ஆம் திகதி நடக்கிறது. இரவு 8.00 மணிக்கு நடைபெறும் இன்றைய தொடக்க ஆட்டத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்-வாரியர்ஸ் அணிகள் மோதுகின்றன.

# ஒருநாள் போட்டிகளில் மாற்றம் வேண்டும்

# சச்சின் கோரிக்கை; ஐ.சி.சி. நிராகரிப்பு



ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஓர் அணி தொடர்ச்சியாக 50 ஓவர்கள் துடுப்பெடுத்தாடாமல் இரு அணிகளும் தலா 25 ஓவர்கள் இரு தடவைகள் துடுப்பெடுத்தாடும் வகையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என இந்திய கிரிக்கெட் நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கர் விடுத்த கோரிக்கையை சர்வதேச கிரிக்கட் சபை (ஐ.சி.சி.) நிராகரித்துள்ளது.

ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 48 சதங்கள் 95 அரைச் சதங்கள் உட்பட 18 ஆயிரம் ஓட்டங்களைக் குவித்த டெண்டுல்கர் இதுதொடர்பாகஐ.சி.சிக்குகடிதம்எழுதியிருந்தார்.

அவுஸ்திரேலிய உள்ளூர் போட்டியொன்றில் பரிசீலிக்கப்பட்டதைப் போன்று 25 ஓவர்கள் கொண்ட நான்கு இன்னிங்ஸ்கள் விளையாடப்படும் விதத்தில் விதிகளில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என அக் கடிதத்தில் டெண்டுல்கர் கோரினார்.

தற்போது 50 ஓவர்கள் கொண்ட இரு இன்னிங்ஸ்களாக ஒருநாள் போட்டிகள் நடைபெறுவதால் நாணயச் சுழற்சியில் வெற்றி பெறும் அணி சீரற்ற காலநிலை, மோசமான ஆடுகளங்கள் காரணமாக அதிக அனுகூலங்களைப் பெறும் வாய்ப்பு உள்ளதாக டெண்டுல்கர் தெரிவித்திருந்தார்.

இதனால் 25 ஓவர்கள் கொண்ட 4 இன்னிங்களாக போட்டிகள் நடத்தப்படும் யோசனையை அவர் முன்வைத்திருந்தார். எனினும் அவ்வாறான மாற்றத்திற்கான அவசியம் இல்லை என ஐ.சி.சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹருன் லோர்கட் நேற்று முன்தினம் கொழும்பில் தெரிவித்தார்.

உத்தேச திட்டங்கள் குறித்த கடிதமொன்று சச்சினிடமிருந்து எமக்கு கிடைத்தது. ஆனால் அது நீண்டகாலத்திற்கு முன்பாகும்.

இது குறித்து நானும் பல தடவை அவருடன் பேசியுள்ளேன். இறுதியாக ஏப்ரல் மாதம் உலகக்கிண்ணப் போட்டிகளின் போது கலந்துரையாடினேன்.

50 ஓவர் போட்டிகளின் வெற்றியைப் பார்க்கும்போது அந்த கட்டமைப்பு ஆரோக்கிமாக உள்ளது. அதில் திடீர் மாற்றம் எதுவும் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என ஹருன் லோர்கட் கூறினார்.

தற்போதைய முறைமையானது



சிறப்பாக உள்ளதாக உலகக் கிண்ண தொடரின் பின்னர் நடைபெற்ற ஐ.சி.சி. நிறைவேற்றுச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என அவர் கூறினார்.

# பெறுபேறுகள் வெளியாகவில்லை

(யாழ்ப்பாணம்)

ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் 2008-2009 கல்வியாண்டில் கற்ற ஊடக டிப்ளோமா பகுதி நேர 2ஆம் அணி மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் இன்னமும் வெளியாகவில்லை என மாணவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

சுமார் நான்கு வருடங்கள் கடந்துள்ள நிலையில் முதலாம் மற்றும் இரண்டாம் வருடங்களுக்கான பெறுபேறுகள் எவையும் இன்னமும் வெளியாகவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இரண்டு வருடங்களை கொண்ட இக்கற்கை நெறியை பகுதிநேர, முழுநேர ஊடகவியலாளர்கள் சுமார் 11 பேர் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

# உரிய நடவடிக்கைகளை... ...

நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் செயற்பாடுகள் சில நாடுகளின் விவகாரங்களைப் பொறுத்தவரை வெற்றி பெற்றுள்ள போதிலும் மிக மோசமான மனித வுரிமை மீறல்கள் இடம்பெற்ற நாடுகளான இலங்கை, ஆப்கானிஸ்தான் மற்றும் பஹ்ரெய்ன் போன்ற நாடுகளின் விவகாரம் குறித் து செயற்படுவதில் தோல்வியைச் சந்தித்துள்ளதாக இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் பொது போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தொடர்பில் நம்பத்தகுந்த சாட்சியங்கள் இருப்பதாக நிபுணர்கள் குழு சுட்டிக் காட்டியுள்ளதாக இவ்வறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

அதேவேளை இப் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கத்தின் பொறுப்புக் கூறும் செயற்பாடுகள் சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப முன்னெடுக்கப்படவில்லை என்ற கவலை யையும் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரி மைகள் ஆணைக் குழு தெரியப்படுத்த வேண்டும் என்றும் இவ்வறிக்கையில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

இப் போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுவதற்கு சர்வதேச பொறி முறை ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற நிபுணர்கள் குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்துவதற்கு செயலாளர் நாயகம் பான் கீ மூனை ஐக்கிய நாடுகள் சபை மனித வுரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்த வேண்டும் எனவும் மனிதவுரிமைகள் கண் காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-8)

# மரண அறிவித்தல்

## இராமலிங்கம் கமலாம்பிகை



யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் கமலாம்பிகை 22-09-2011 (நேற்று) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் -தங்கம் தம்பதியினரின் அன்பு மகளும், அமரர் இராமலிங்கத்தின் பாசமிகு துணைவியாரும், காலஞ் சென்றவர்களான நாகலிங்கம், துரையப்பா, பழனி, ராசம்மாவின் அன்புச் சகோதரியும், கனகேஸ்வரி, நகுலேஸ்வரி, இராசாத்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், மயில்வாகனம், ஜெகன், கணேஷ் ஆகியோரின் அன்பு மாமியும், பிரியதர்ஷினி, பத்மதர்ஷினி, ராஜகௌரி, விதுன், மிதுலா, தீபிகா, நிக்ஷிகா, சதுர்ஜன், பிர்த்திகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 23.09.2011 இன்று பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்: மருமகன் க. கணேசரட்ணம்
கணேஷ் அழககம்

கே.கே.எஸ்.றோட், நாச்சிமார் கோவிலடி, யாழ்.

(6902)

உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL



No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.

MAHARAJA FOOD PRODUCT
கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha, Wellawathte.
T.P:-0112360926,0112259849
யாழ்ப்பாணம்
aramex
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825



NIRUTUITION CENTRE
KONDAVIL
A/L கணக்கீடு
2012 -பங்குடமை முடிவுக் கணக்கு
2013- தொங்கல் கணக்கு
திரு. தவா
(3898)

அதிபர், ஆசிரியர்கட்கு
தரம் 1, 2, 3, 4, 5
அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள்
புத்தகம் வெளிவந்துவிட்டது
உடன் பெற்றுக் கொள்ளலாம்
தயா அச்சகம்
138, நாவலர் றோட், (மனோகராச் சந்தி) யாழ்ப்பாணம்.
575,கே.கே.எஸ். றோட், நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 0215672342
(6403)

இடமாற்றம்
இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
நியூ லலிதாஸ் ஜுவல்லறி ஸ்தாபனம்
10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : 021 222 4134
(சி-4418)




## இலங்கை... ...

பங்காளிக் கட்சியான கிறீன் கட்சியின் செனட்டர்லீ ரெஹ்னொன்யோசனை ஒன்றை சமர்ப்பித்தார். இந்த யோசனை நேற்று செனட்டில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அவுஸ்திரேலிய அரசாங்க வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படையில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வை காண முடியாது என்று அவுஸ்தி ரேலிய அரசின் சார்பில் இதன் போது வாதம் முன்வைக்கப்பட்டது. (ச-8)

## வாள் காட்டி நகைகள்... ...

வைத்தியரையும் ரீப்பையினால் சரமாரியாகத் தாக்கியுள்ளனர். இத் தாக்குதலில் யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்தியராக பணி புரியும் என். சிவகோணேசன் (வயது-43) அவரின் மாமனார் எஸ்.கனகலிங்கம் (வயது 72) ஆகிய இருவருமே காயமடைந்தவர்கள்.

இதில் கொள்ளையர்களினால் ஒரு சங்கிலி, 2 காப்பு, 3 கைத் தொலைபேசி என்பன சூறையாடப்பட்டுள்ளது.

இதேவேளை அப்பகுதியில் உள்ள மற்றொரு வீட்டினுள் நேற்று அதிகாலை 3.00 மணியளவில் வீட்டின் யன்னல் கம்பியை உடைத்து கொள்ளையர்கள் நுழைந்துள்ளனர். அச்சமயம் கொள்ளைச் சம்பவத்தை தடுக்க முற்பட்ட வீட்டின் உரிமையாளரை வாளினால் வெட்டி காயப்படுத்தியுள்ளனர்.

இதில் சபாரட்ணம் செல்வராசா என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை வங்கியில் பணி புரிந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் தொலைபேசி அழைப்பு வந்ததும் தப்பித்து ஓடியதாகக் கூறப்பட்டது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கொக்குவில் செம்பியன் வீதியிலுள்ள வீடொன்றிலும் இவ்வாறான கொள்ளைச் சம்பவம் ஒன்று கடந்த சில தினங்களுக்கு முன் இடம் பெற்றுள்ளது. (எ-6)


ESOFT
உடனடி வேலைவாய்ப்பு
1.விரிவுரையாளர்கள் (Lecturers)
2.போதனாசிரியர்கள் (Instructors)
3.அலுவலக உதவியாளர்கள் (Office Peon)

வெற்றிடங்களுக்கான கிளைகள்
1.கிளிநொச்சி 2.காரைநகர் 3.கொடிகாமம் 4.வவுனியா

உங்கள் சுயவிபரக் கோவையை 27-09-2011 இற்கு முன்னதாக கிடைக்குமாறு கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Human Resources Manager.
Esoft Computer Studies (Pvt) Ltd.
Regional Head Office- North
No.166/3, Navalar Road
Jaffna.


## ஐ.நா.செயலரை... ...

அதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 4ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் பான் கீ மூனைச் சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையை பான் கீ மூன் வெளியிட்ட பின்னர் முதல் முறையாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவரைச் சந்திக்கவுள்ளார்.

இச் சந்திப்பின்போது நிபுணர்கள் குழுவின் அறிக்கையை பான் கீமூன் மனிதவுரிமைகள் ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைத்தமை தொடர்பில் ஜனாதிபதி தனது அதிருப்தியை வெளியிடுவார் என நம்பப்படுகின்றது.

அதேவேளை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இவ்வாரம் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திக்கவுள்ளதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச் சந்திப்பின்போது இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இடம் பெற்றுவரும் பேச்சுவார்த்தை மற்றும் போரின் போது இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக மன்மோகன் சிங்கிற்கு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விளக்கமளிப்பார் எனவும் இச் செய்திகள் குறிப்பிடுகின்றன. (ச-8)

## பூமியைத்... ...

சியாளர்களால் கணிக்க முடியவில்லை. இன்று அல்லது நாளை பூமியில் விழும் என தெரிவிக்கின்றனர். (எ-8)

## சீனாவில்... ...

நிலையில் சீனாவில் தற்போது ஏற்பட்டுள்ள மழை வெள்ளத்தால் நாட்டின் 13 மாகாணங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அந் நாட்டின் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. சீனாவின் தென் மற்றும் கிழக்கு பகுதிகள் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

அதிகமாக பாதிக்கப்பட்டுள்ள சீயங் மாகாணத்தில் சுமார் 8 ஆயிரத்து 400 வீடுகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளதுடன், 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீனா வரலாற்றில் கடந்த 50 ஆண்டுகளாக அதிக பாதிப்பை ஏற்படுத்திய வெள்ளப் பெருக்கு இதுவெனத் தெரிவிக்கப்பட்டது. (ச-8)

## நிபுணர் குழுவின்... ...

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கு செயலாளர் நாயகம் பான் கீ மூன் கையளித்த நிபுணர்கள் குழுவின் அறிக்கையை ஏற்கக் கூடாது எனக் கோரும் கடிதம் ஒன்றில் சில நாடுகளிடம் இருந்து அரசாங்கம் கையொப்பங்களைப் பெற்றுள்ளதாக கொழும்புச் செய்தி கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு கோரிக்கை விடுக்கும் இக்கடிதம் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தற்போதைய தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் எந்தவொரு சபையினதும் முறைப்படியான அங்கீகாரத்தைப் பெறாத நிபுணர்கள்குழுவின் அறிக்கையைமனித உரிமைகள் ஆணைக்குழுவில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது எனவும் இக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அரசிற்கு ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இக்கடிதத்தில் சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் மலேசியா, பிலிப்பைன்ஸ், அல்ஜீரியா, பங்களாதேஷ், மாலைதீவு மற்றும் கியூபா ஆகிய 9 நாடுகள் கையொப்பம் இட் டுள்ளதாக தெரிய வருகின்றது.

அதேவேளை இந்தியா உள்ளிட்ட முக்கியமான சில நாடுகளிடமிருந்து இக்கடிதத்தில் கையொப் பம் பெறுவதற்கு அரசு மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிபடைந்துள்ளதாகவும் கூறப்படு கின்றது.

இவ்விவகாரத்தில் முன்கூட்டியே எதுவும் செய்ய முடியாது எனவும் இது குறித்த விவாதம் எடுத்துக் கொள்ளப்படும் போது பார்த்துக் கொள்ளலாம் எனவும் இந்தியா கூறி விட்டதாக கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் தெரிவிக்கின்றன. (எ-8)

## மர்ம நபர்... ...

ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக தகவல் வெளியாகவில்லை என பொலிஸார் தெரிவித்துள் ளனர். இக்கொலைச்சம்பவத்தினையடுத்து வேலணையில் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது. (ச-6)


கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

பதவி வெற்றிடங்கள்

கீழ் குறிப்பிடும் பதவி வெற்றிடங்களுக்கு ஆண் விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. விண் ணப்பிக்க விரும்புவோர் நேரிலோ அல்லது தபால் மூலமோ சங்கப் பணிமனையில் விண்ணப்பங்களைப் பெற்று 08.10.2011ம் திகதி அன்று அல்லது அதற்கு முன் பொது முகாமையாளர், கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம் வீதி, நெல்லியடி, கரவெட்டி என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கலாம்.

01. பதவி :- காசாளர் வெற்றிடம் 01
சம்பளக் குறியீட்டு இலக்கம் :- 306/13
சம்பள அளவுத் திட்டம் :- 9950, 85X10, 90X10, - 11700.00
வயது எல்லை :- 18 - 45

தகைமைகள்
அ) கூட்டுறவுப் பணியாளர் 14வது சம்பளத் திட்ட பதவி ஒன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15வது சம்பளத் திட்டப் பதவி ஒன்றில் நான்கு (04) வருடத்திற்கு குறையாத அனுபவம்.
அல்லது
ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த(சாதாரணம்) கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியும், கூட்டுறவுச் சங்கமொன்றில் காசாளர் அல்லது வியாபார நடவடிக்கை பற்றி இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

02. பதவி:- சாரதி வெற்றிடம் 01
சம்ப்ளக் குறியீட்டு இலக்கம் :- 312/15
சம்பள அளவுத் திட்டம் :- 9450, 75X10, 80X10, - 11000.00
வயது எல்லை :- 18 - 45

தகைமைகள்:-
எட்டாம் (08) வகுப்பு கல்விச் சான்றிதழும், உழவியந்திர சாரதி அனுமதிப் பத்திரத்துடன் ஒரு (01) வருடத்திற்கு குறையாத அனுபவம்.
அ) கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் விண்ணப்பங்களை பணிபுரியும் சங்கங்களினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
ஆ) சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
இ) தெரிவு செய்யப்படுபவர் சங்கத்தால் விதிக்கப்படும் பிணைப் பணத்தை உடன் செலுத்துதல் வேண்டும்.
ஈ) பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் முடிவு திகதிக் குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

நெல்லியடி, கரவெட்டி.
23.09.2011
பொது முகாமையாளர்.
(சி-4516)

வீடு விற்பனைக்கு
கோயில்கடவை, துன்னாலை மத்தி, கரவெட்டியில் 4 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு:- K.பவானி T.P.:0771279621
(6197)

சண் சலூன்
பாடசாலை அருகாமை
கைவேலி, புதுக்குடியிருப்பு
(மீண்டும் புதுப்பொலிவுடன் உதயமாகியுள்ளது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத் தருகின்றோம்)
(சி-4514)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.